# அருள் அயனம்

## இந்து மன்ற சிறப்பு மலர் 2004

ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
தேசிய பாடசாலை
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை

ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின்

## இந்து மன்றச் சிறப்பு மலர்

# அருள் அயனம்

**22. 10. 2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our College's Vision

**INTEGRATING TEACHING, RESEARCH AND SERVICE**

**TO IMPART QUALITY EDUCATION.**

**தரமான கல்வியை அளிப்பதற்கு கற்பித்தல், ஆய்வு, சேவை என்பவற்றை ஒருங்கிணைத்தல்.**

# Mission

**CONCERTED DEDICATION**

**IN PURSUANCE OF QUALITY EDUCATION**

**THROUGH IMPLEMENTATION OF MODERN TECHNIQUES, REFORMS AND IDEAS.**

**நவீன நுட்பங்கள் சீர்திருத்தங்கள்,**

**சிந்தனைகளை அமுல்படுத்துவதன் ஊடாக**

**தரமான கல்வியை**

**பெறுவதற்கு இடையறாத அர்ப்பணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
(தேசிய பாடசாலை)

# கல்லூரிக் கீதம்

**ஆக்கம் : சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் 1951**

ஈழ நாட்டின் கீழ்த் திசையில்
எழில் மலிந்த துறைமுகம்
ஈசனுறையும் கோணமலை
எங்கும் இசை மலிந்தது
வாழுமக்கள் கல்வி செல்வம்
வகையினெய்தி வாழவே
வகுத்த கல்வி முறையில் நல்கி
வைப்பதெங்கள் பள்ளியே.

எங்கள் பள்ளி கலையின் தெய்வம்
இனிதமைந்த தாயகம்
ஈழநாட்டின் சமயமெல்லாம்
இருக்கும் சைவப் பேடகம்
மங்களம் சேர் சிறுவர் நாங்கள்
வண்ணப்பாடல் பாடியே
மயில்கள் போல ஆடி மகிழும்
வடிவமைந்த பீடகம்.

கைத்தொழில்கள் கமத்தொழில்கள்
காட்டிச் செல்வம் கூட்டியே
கலைகளெல்லாம் புதிய முறையில்
கற்பித்தெம்மை ஏத்திடும்
இத்திறத்தில் வளம்பெருக்கி
எம்மை நல்கும் சண்முக
வித்தியாசாலைக்கு வாழ்த்து
விரும்பி நாமும் கூறுவோம்.

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க வென்று வாழ்த்துவோம்
வந்தனங்கள் சொல்லி நீடு
வாழ்கவென்று வாழ்த்துவோம்
தாழ்மையோடு பாலரெல்லாம்
தாழ்ந்து தெய்வம் போற்றியே
தங்கம்மாளின் தருமத் தொண்டு
தரணி போற்ற வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

## பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக்குருக்கள்.

ஆலய பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.
திருக்கோணமலை

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவமும் தமிழும் சேர்ந்து மணங்கமிழும் திருக்கோண மலையின் கண்ணே கல்வி, வினைத்திறன்களில் சிறந்து விளங்கும் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியினரின் சமய விழிப்புணர்வு மிகு வெளியீடாக "அருள் அயனம்" எனும் இந்து சமய கருத்துகளை உள்ளடக்கிய மலரொன்று தனது முதலாவது படியில் காலடி எடுத்து வைத்துள்ளது. இக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர், மாணவிகளின் அரிய முயற்சியின் உந்துதலாக வெளிவரும் இந்நூல் மென்மேலும் சிறப்புற்று தொடர்மலராக வெளிவர ஸ்ரீ பத்திர காளியம்பாளின் நல்லாசிகள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஞானசிரோன் மணி
சைவப் புலவர் – பண்டிதர்
ஆர். வடிவேல்

மிகத் தொன்மை வாய்ந்த நமது பாரம்பரிய பண்பாட்டுப் பழைமைகளைப் பேணிப் பாதுகாக்கும் அரும் பெரும் லயங்களாகத் திகழ்பவை இரண்டு ஒன்று ஆலயம் மற்றது வித்தியாலயம். இந்தவகையில் 20ம் நூற்றாண்டில் அன்னை தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களால் நிறுவப்பெற்றது ஸ்ரீ சண்முக வித்தியாலயம். இது தமிழுக்கும், சைவத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததே.

ஆல் போல் தழைத்து, அறுகுபோல் நிற்கும் வித்தியாலயத்தின் இந்து மன்றத்தினர் மாணவர்களுக்கும், மக்களுக்கும் பயன்படும் வகையில் "அருள் அயணம்" என்னும் சிறப்பு மலரை ஆரம்பித்து அங்குரார்ப்பணம் செய்வதறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

"அயணம்" என்றால் வழி. சூரியன் வடக்கே செல்வது உத்தராயணம். தெற்கே செல்வது தெட்சிணாயணம். இராம, லெட்சுமணர் கானகம் சென்ற வரலாறு கூறுவது "இராமயணம்" இராமனது வழி என்ற பொருள்படும். ஆலயம் ஆத்மீக வழிக்கும், வித்தியாலயம் தெய்வீக வழிக்கும், லௌவீக வழிக்கும் வழி காட்டும்.

இந்த மாபெரும் இலட்சியத்தோடு இந்து மன்றத்தினர் ஆரம்பிக்கும் சிறப்பு மலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஆற்றிய சமய, சமூக, கல்விப் பணியை நினைவு படுத்துகிறது. அன்னை தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களின் சமய, சமூக, கல்விச் சிந்தனையைப் பிரகாசிக்கச் செய்யும் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் போற்றி வாழ்த்துகின்றோம்.

"காலமறிந்து செயற்படுபவன்
செயலை முடிக்கின்றான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

திருமதி. அ. வேலாயுதம்
ஆசிரிய ஆலோசகர் (சைவ சமயம்)
வலயக்கல்வி அலுவலகம்
திருக்கோணமலை

திருகோணமலை நகரின் தலை சிறந்த பெண்கள் கல்லூரியாகத் திகழும் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின், இந்து மன்றத்தினரால் நவராத்திரியை முன்னிட்டு இவ்வருடம் முதற்கொண்டு வெளியிடப்படும் "அருள் அயணம்" என்னும் இந்து சமயசஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த எண்பது (1923 – 2003) ஆண்டு கல்வி வரலாற்றிலே அரும் பெரும் சாதனைகளைப் புரிந்த இக்கல்லூரியானது இவ்வாண்டு சமய சஞ்சிகை ஒன்றினை வெளியிட முன்வந்ததையிட்டு பெருமையடைகின்றேன். இம் மலரில் பல்துறை அறிஞர்களின் ஆக்கங்களும் குறிப்பாக கல்லூரி மாணவிகளின் சுய ஆக்கங்களையும் கொண்டமைந்தது வரவேற்கத்தக்கது. அத்துடன் மாணவிகளின் கலை, கலாச்சாரப் பண்பாடுகளை வளர்க்கும் நோக்குடன் மாணவிகள் மத்தியில் பண்ணிசை, கோலம் போடுதல், மாலை கட்டுதல், பேச்சு, கட்டுரை ஆகிய போட்டிகள் நடாத்தப்பட்டு மாணவிகளை ஊக்குவிக்குமுகமாக போட்டி முடிவுகளையும் ஏந்தி வருவது ஒரு சிறப்பான அம்சமாக உள்ளது.

ஈடிணையற்ற சைவசமுதாயம் ஒன்றினை உருவாக்குவதில் இக்கல்லூரி ஆற்றிவரும் பங்கும், பணிகளும் பாராட்டப்பட வேண்டியவை. நீண்ட நாளாக சைவ சமய சிறப்பு மலரை வெளியிட வேண்டும் என்ற அவாக்கொண்டு இருந்த கல்லூரி அதிபர் திருமதி சந்திரா பாலசுப்பிரமணியம் அவர்களின் கனவு நனவாகுவதையிட்டு பெருமை அடைகின்றேன். அவருடன் உறுதுணையாக விளங்கிய உப அதிபர், ஆசிரியர்களையும் நான் பாராட்டுகின்றேன்.

வருடா வருடம் "அருள் அயணம்" வெளிவந்து அருள் ஒளி வீச வேண்டும் என்று எல்லாம் வல்ல கோணேசப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

திருமதி. ச. பாலசுப்பிரமணியம்.
அதிபர்
ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

அன்னை திருமதி தங்கம்மா சண்முகம் பிள்ளை எனும் ஒப்பற்ற பெண்மணியினால் 1923ல் அத்திவாரம் இட்டு, ஆரம்பிக்கப்பட்ட சண்முக இந்து மகளிர் கல்லூரி அன்னாரின் கனவை நனவாக்கும் தொடர்ச்சியான முயற்சிகளில் ஈடுபட்டு வருவது அனைவரும் அறிந்ததே. அத்தகைய முயற்சிகளின் முதன்மையானதாக கல்லூரியின் இந்துமன்றம் இவ்வருடம் "அருள் அயனம்" எனும் இந்த மலரை வெளியிடுகின்றது. இந்துப் பெண்களுக்கு இந்துப் பாரம்பரியங்கள் ஒழுக்க விழுமியங்களை உரிய முறையில் கற்பித்து செழுமையான கல்வியை அளிக்க வேண்டும் என்பதே அன்னையாரின் கனவாகும். அந்த வகையில் இந்து மன்றம் இந்த கன்னி முயற்சியை ஆரம்பித்துள்ளமையை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

வெறுமனே பரீட்சை நோக்கிலான பாட அறிவைப் பெற்றுக் கொள்வது மாத்திரம் கல்வி ஆகாது. வாழ்க்கைக்குத் தேவையான பயனுள்ள அனுபவங்களையும் தேடிக் கொடுப்பது பாடசாலையின் முக்கியகடமையாகும். அந்த வகையில் மாணவர்களின் இந்துசமய அறிவையும், பண்பாடுகளையும் வளர்ப்பதற்கு இத்தகைய முயற்சிகள் பயனளிக்கும் என்பது எனது நம்பிக்கை. இந்த முயற்சிக்கு முன்னோடியாக இருந்து செயற்பட்ட அனைவருக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுக்கள். இந்தப் பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றத் தலைவரின் செய்தி

தட்சணகைலாயம் எனப் போற்றப்படும் கிழக்கிலங்கையின் கண் அமைந்துள்ள திருகோணமலையில் சைவ பாரம்பரியம், சைவ ஒழுக்கங்களுடன் கூடிய மகளிர் கல்லூரியில் முதன்மை வகிக்கும் கல்லூரி தி/ ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி. மேலும் சைவ நிலையை மெருகூட்டவும், சைவ பாரம்பரியத்தையும் பேணும் நோக்கில் அமைக்கப்பட்டதே இக்கல்லூரியின் இந்து மன்றமாகும். இம் மன்றச் செயற்பாட்டின் மூலம் பல மாணவர்களை சைவ பாரம்பரியத்திலும் சைவ ஒழுக்கத்திலும், கலையிலும் இணைத்துவிட்டதுடன் மட்டுமல்லாது அவர்களின் திறமைகளையும் வெளிக்கொணரும் மன்றமாக இந்து மன்றம் திகழ்கின்றது.

இவ்வருடத்தில் இம்மன்றச் செயற்பாடு பாரிய அளவில் ஈடுபட காரணமாக அமைந்தவை ஸ்ரீ சாரதாதேவி அன்னையின் அருட் தன்மையே எனக் கூறினால் அது மிகையாகாது. இவ் அன்னையின் நூற்றி ஐம்பதாவது ஜயந்தி தினம் திருகோணமலை மாவட்டத்தில் பல பாடசாலை சைவ மாணவர்களையும் ஊக்குவித்ததுடன் பேச்சு, கட்டுரை போன்ற நிகழ்வுகளினூடாக அவர்களின் திறமைகளும் வெளிக்கொணர வழி செய்தது.

மேலும் இதன் வளர்ச்சி நவராத்திரி விழாவிற்கும் அடித்தளம் அமைத்தது. பேச்சு, வினாவிடை, திருக்குறள், தேவாரமனனம், பண்ணிசை, கோலம், மாலை கட்டுதல் போன்ற போட்டி நிகழ்வுகளின் மூலம் மாணவர்களின் திறன் வெளிப்பாட்டையும் சைவப்பற்றினையும் வளர்க்க முன்னோடியாக திகழ்ந்தது. அத்துடன் என்றுமில்லாதவாறு அன்னையின் அருட் சக்தியின் பிரதிபலிப்பால் இவ்வருடம் "அருள் அயணம்" நூல் ஒன்றையும் வெளியிடுகின்றது. இம் மலர் வெளியீடு வருடா வருடம் விஜயதசமி அன்று தொடர்ந்தும் மலர எல்லாம் வல்ல சக்தியின் அருளை வேண்டிநிற்கின்றோம்.

இம்மன்றச் செயற்பாட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபருக்கு முதற் கண் நன்றியை தெரிவிப்பதோடு மட்டுமல்லாது இம்மன்றத்திற்கு எல்லா விதத்திலும் உதவிய அனைவருக்கும் இம்மன்றம் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம். இனி வரும் காலங்களிலும் இம்மன்றச் செயற்பாடு சிறப்புற நடைபெற அனைவரது ஆதரவையும் இவ் இந்து மன்றம் வேண்டி நிற்கின்றது.

திருமதி. ப. ஸ்ரீதரன்.
ஸ்ரீ சண்முக இந்து மகளிர் **கல்லூரி**
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றம் – 2004
# நிர்வாகக் குழு

காப்பாளர் போஷகர் - திருமதி.ச.பாலசுப்பிரமணியம் (அதிபர்)

- திருமதி.சு.ஜெயபாலன் (பிரதி அதிபர்)

- திரு.மா.பாலசிங்கம் (பகுதித் தலைவர்)

தலைவர் - திருமதி.ப.ஸ்ரீதரன்

உபதலைவர் - திருமதி.த.ஹரிஹரன்

செயலாளர் - செல்வி.ப.சோமசுந்தரம்

உப செயலாளர் - திருமதி.யோ.சுந்தரலிங்கம்

பொருளாளர் - திருமதி.செ.அமிர்தகுலசிங்கம்

நிர்வாகக் குழு உறுப்பினர்கள்.- திருமதி.இ.ரகுந்திரராஜா

- திருமதி.வா.கௌரிதரன்

- திருமதி.த.இந்திரசேனன்

- திருமதி.ந.சுந்தரராஜன்

- திருமதி.சு.முனீஸ்வரன்

மலர்க் குழு திருமதி.ச.பாலசுப்பிரமணியம் (அதிபர்)

திருமதி.சு.ஜெயபாலன் (பிரதி அதிபர்)

திரு.மா.பாலசிங்கம் (பகுதித் தலைவர்)

திருமதி.ப.ஸ்ரீதரன் (ஆசிரியை)

செல்வி.யுதீக்ஷினி மாணிக்கவாசகம் (மாணவி)

*ஆக்கங்களுக்குப் பொறுப்பு ஆக்கியோரே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மன்ற உறுப்பினர்கள் - 2004



இருப்பவர்கள் :-
திருமதி ப.ஸ்ரீதரன் (தலைவர்), திருமதி செ. அமிர்தகுலசிங்கம்(உப அதிபர்), திருமதி ச.பாலசுப்பிரமணியம் (அதிபர்), திருமதி சு.ஜெயபாலன் (பிரதி அதிபர்), செல்வி ப.சோமசுந்தரம் (செயலாளர்)

நிற்பவர்கள்:-
திருமதி த.இந்திரசேனன், திருமதி சு. முனீஸ்வரன், திருமதி யோ.சுந்தரலிங்கம், திருமதி இ.ரகுந்திரராஜா, திருமதி ந.சுந்தரராஜன், திருமதி த.ஹரிகரன்

## அருள் அயனம் மலர்க்குழுவினர்



திரு. மா.பாலசிங்கம், திருமதி. ப.ஸ்ரீதரன், திருமதி. ச. பாலசுப்பிரமணியம் (அதிபர்)
திருமதி. சு.ஜெயபாலன் (பிரதி அதிபர்), செல்வி. யுதிக்ஷினி மாணிக்கவாசகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியர் பக்கம்

அறப்பணி புரிந்த எமது கல்லூரியின் ஸ்தாபகர் திருமதி தங்கம்மா சண்முகம் பிள்ளை அவர்களின் சமூகப் பணியை எமது கல்லூரி தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. அதன் ஒரு அங்கமாகவே கல்லூரியின் இந்துமன்ற வெளியீடான "அருள் அயணம்" மலரினை நாம் காண்கின்றோம். இற்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன் பெண் கல்வி பற்றியோ அல்லது சமூக விழிப்புணர்வு பற்றியோ அதிக அக்கறை காட்டாத காலகட்டத்தில் எமது ஸ்தாபகர் அவர்கள் மேற்கொண்டிருந்த தீர்க்க தரிசனம் எத்துணை விசாலமானது என்பதை இச் சமூகம் வியந்து நிற்கின்றது. அன்னையவர்கள் விட்டுச் சென்ற பணியினையும், மரபினையும் பேணிப் பாதுகாத்து அதனை தொடர வைப்பது எம் அனைவரதும் கடமையல்லவா?

கல்லூரியின் இந்துமன்றம் சைவத்தையும், தமிழையும் தழைத்தோங்கச் செய்து பண்பட்ட சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் கூட, இம்மலர் வெளியீடு அதனுடைய ஒரு கன்னி முயற்சியாகும். குறுகிய காலத்தில் இவ்வாறான ஒரு மலரினை வெளியீடு செய்வதில் எம்மோடு பங்காற்றிய அனைவரும் எமது நன்றிக்குரியவர்கள். மேன்மை கொள் சைவ நீதி இவ்வுலகமெல்லாம் பரவ இம்மலர் தன்னாலான அனைத்தையும் மேற்கொள்ள வேண்டுமென்பதே எமது பேரவா.

நன்றி.

**மலர்க் குழு சார்பாக,**
**மா.பாலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலரின் உள்ளே.....


1. பாரம்பரியமான இந்து அறிகையும் ஆளுமைக் கோட்பாடும்.......... 1

2. ஈழத்தில் ஒல்லாந்தர் காலச் சைவத்தமிழ் எழுச்சி.................. 7

3. தேவியர் மூவர் .......................................................... 15

4. ஆனந்தப் பாதை ........................................................ 18

5. நலம் தரும் நவராத்திரி .................................................. 21

6. மனிதப் பிறப்பின் குறிக்கோள் ........................................ 24

7. தியானமும் யோகாசனமும் ............................................ 26

8. திருக்கோணேஸ்வர வரலாறு .......................................... 28

9. HINDUSIM - A BRIEF SKETCH An Extract from Swami Vivekananda's Address in Chicago ................. 32

10. சிவபுராணம் சில சிந்தனைகள் ....................................... 38

11. தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் வாழ்வில் என்னை நெகிழ வைத்த சம்பங்கள் ................................... 43

12. குத்து விளக்கு ஏற்றுதலின் மகத்துவம் .............................. 47

13. அறிந்து கொள் கல்வியை ............................................. 49




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரியமான இந்து அறிகையும் ஆளுமைக் கோட்பாடும்

பேராசிரியர் சபா.ஜெயராசா
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஒவ்வோர் உளவியற் சிந்தனா கூடத்தினரும் தத்தமது தளங்களில் நின்று ஆளுமையை விளக்குதலும் ஆளுமைப் பரிமாணங்களை விபரித்தலும், வியாபிக்கும் நிலையில் ஆளுமைக்குத் தனித்த ஒரு வரைவிலக்கணத்தை தருதல் எளிதன்று. உளப்பகுப்புச் சிந்தனா கூடத்தினர் நனவிலி உள்ளத்தைச் சிறப்பாகக் கொண்டு ஆளுமையை விளக்குவர். மானிடப் பண்பு உளவியலாளர் இலட்சிய அகத்தையும் (Ideal Self) நடப்பு வடிவிலான அகத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஆளுமையை விபரிப்பார். அறிகைச் சிந்தனா கூடத்தினர் சிந்தனை அமைப்பையும் அதன் தொழிற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆளுமையை விளக்கிக் கூறுவர். நடத்தை வாதிகள் நடத்தைக் கோலங்களின் அடிப்படையில் ஆளுமையை விபரிப்பர். மார்க்சிய உளவியலாளர் மனிதரின் சமூக இருப்புக்கும் ஆளுமைக்குமுள்ள தொடர்புகளை விளக்குவர்.

இந்து சமயக் கோட்பாடுகள் வேதங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கப் படுகின்றன. கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக வேதங்களின் தோற்றம் விளக்கப்படுகின்றது. இயற்கை வழிபாட்டிலிருந்து செம்மையும் செழுமையும் பெற்ற அறிகை நிலைத் தத்துவங்கள் வரை வேத கால வழிபாட்டு முறையும் அவற்றின் மனிதர் பெறும் ஆளுமை ஊட்டங்களும் நீண்ட வீச்சுக் கொண்டவை. வேள்விகளும் சடங்குகளும் வேதங்கள் உள்ளடக்கிய இன்னொரு பரிமாணமாகும். தானியம் பெருக, செல்வம் பெருக வேள்விகள் மேற்கொள்ளப்பட்டன. வேதங்களின் இன்னொரு பரிமாணம் மனிதருக்குள்ளே பொதிந்துள்ள உள்ளார்ந்த உண்மையை அறிதலாகும். வேதத்தின் நிறைவாக விளங்கும் உபநிடதங்கள் தன்னை அறிதலை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. ஆக, இந்து தத்துவம் குறிப்பிடும் ஆளுமை தன்னை அறிதலோடு முகிழ்ப்புக் கொள்கின்றது. வழிபாடுகளாலும், தற்கட்டுப்பாடுகள் வழியாகவும், யோக அநுட்டானங்கள் வாயிலாகவும் இயற்கை வலுவை அல்லது மானிடப் பண்புகளை வளர்த்துக் கொள்ளலாம் என நம்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகம் பற்றிய நிறைவான விளக்கங்கள் பகவத் கீதையிலே தரப்பட்டுள்ளன. கிருஷ்ணருக்கும் அருச்சுனருக்கும் இடையே நிகழும் உரையாடல்கள் ஆழ்ந்து செல்கின்றன. குருவாய் அருள வந்த கிருஷ்ணர் யோக அநுட்டானங்களைப் பற்றி தந்துள்ள விளக்கங்கள் மனித ஆளுமை விருத்தி பற்றி அறிகை நிலையிலும், ஆட்சி (Domain) நிலையிலும் விளக்கி நிற்கின்றன. கடமை, பக்தி, தற்கட்டுப்பாடு, தியானம் மற்றும் செயற்பாடுகள் கீதையிலே விரிவாக விளக்கப்படுகின்றன.

யோக கோட்பாட்டில் ஆன்மா என்பது நித்தியப் பொருளாகின்றது. ஆன்மாக்களிலே பெரியது சிறியது என்ற அளவீட்டுக்கு இடமில்லை. உடலாலோ உள்ளத்தாலோ ஆன்மா பாதிக்கப்படுவதில்லை. ஆன்மாவின் அழிவற்ற நித்தியப் பண்பு இந்து சமயத் தத்துவத்தில் ஆளுமையை விளக்குவதற்கு அடிப்படையாக அமைகின்றது.

வெளியுலக இன்பங்களைத் தேடி அலைவோர் தம்முள்ளே பொதிந்துள்ள ஆனந்தத்தை அறிந்து கொள்வதில்லை. ஆனந்தத்தை அறியும் நிலையே ஆளுமையின் உன்னத நிலையாகும் என்பது இந்து சமயக் கோட்பாடு.

இந்து சமயத்தில் மூன்று பரிமாணங்களின் அடிப்படையில் இயற்கை உருவாக்கப் பட்டுள்ளதாகக் கொள்ளப்படுகின்றது. அவை

- தாமச குணம்
- இராஜச குணம்
- சத்வச குணம்

பொருட்கள், சிந்தனை, செயல் ஆகியவை மேற்கூறிய முக் குணங்களையும் அடிப்படையாகக் கொண்டவை. தாமச குணம் இருளையும், இராஜச குணம் செயற்பாட்டினையும், சத்வச குணம் தெளிவு அல்லது ஒளியையும் குறிப்பிடும். ஒரு சிற்பத்தை ஆக்கும் செயலை உதாரணமாகக் கொண்டு இதனை விளக்குவதாயின் தாமசம் செதுக்கப்படாத கல்லையும், இராஜசம் சிற்பத்தைச் செதுக்கும் செயற்பாட்டினையும், சத்வச குணம் சிற்பியின் சிந்தனையில் உருவாகும் சிலையையும் குறிப்பிடும். ஒவ்வொரு மனிதரதும், ஆளுமையிலும் மேற்குறிப்பிட்ட குணங்களுக்கிடையே ஒருவித சமநிலை எட்டப்படுகின்றதாயினும், அவற்றுள் ஒரு பண்பு மேலோங்கிய நிலையிலும் காணப்படும்.

கனதியான உணவுகளை உண்பதும் தூக்க இன்பமும் தொழிற்பட முடியாத சோம்பலும் தாமச குணம் மேலோங்கியோரது ஆளுமையிலே விரிவுபெறும். உறுதியான மனவெழுச்சிகள், விரைந்து செயற்படுவதற்கான ஊக்கம், செறிவான உணவு உண்ணல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவை இராஜச குணம் மேலோங்கியவரது ஆளுமைப் பண்புகளாக இருக்கும். சாந்த குணம், தெய்வீக ஈடுபாடு, உடலை சாதுவான நிலையில் வைத்திருப்பதற்குரிய மரக்கறி உணவு வகைகள், பழங்கள் முதலியவற்றை உண்ணல் ஆகிய பண்புகள் சத்வச குணமுடையோரிடத்துக் காணப்படும்.

யோக நெறியில் சித்தம் என்பது எல்லா வகையான சிந்தனை செயல்முறைகளையும் உள்ளடக்கும். புலன் உணர்ச்சி, புலக்காட்சி, உள்ளுணர்வு (Intuition) பகுத்தறியும் நுண்மதி முதலியவை சித்தத்துள் அடங்கும். உணர்வுகள் அலை அலையாக மேலோங்கி உள்ளார்ந்த சுயத்தின் ஒளியைத் தரிசிக்க விடாது தடுக்குமாயின் அதிலிருந்து மீட்சி கொள்வதற்குரிய வழி யோக அநுட்டானமாகும். யோக நெறியில் மூச்சு ஒழுங்கு, உடற் கட்டுப்பாடு, முதலியவற்றால் வளப்படுத்தப்படுகின்றது. மனம் அமைதியைப் பெறும் பொழுது உள்ளொளியை அறிதல் எளிதாகின்றது.

உள்ளொளியைத் தரிசிப்பதற்கு சம்ஸ்காராஸ் எனப்படும் நனவடி உள்ளத் தொழிற்பாடுகள் தடைகளாக அமைதல் உண்டு. முன்னைய தொழிற்பாடுகளின் கர்ம வினைகள் அலைகளாக எழுந்து உள்ளொளியைத் தரிசிப்பதற்குத் தடைகளாக அமைதல் உண்டு. அவற்றிலிருந்து மீண்டு உள்ளொளியைக் காண்பதற்கும் யோக அநுட்டானம் துணை நிற்கும். உணர்வுகளை அடக்குதல் அன்று, எதிர்மறையான உணர்வுகளையும் செயல்களையும் நேர்நிலையான உணர்வுகளாகவும் தெளிந்த சிந்தனைகளாகவும் மாற்றுதல் யோக நெறியாகின்றது.

எதிர்மறையான விளைவுகளை உண்டாக்கக் கூடிய செயல்களில் ஈடுபடாதிருத்தல் கர்ம யோகம் அல்லது யோகச் செயல்முறையின் பிரதான வலியுறுத்தலாகும். விருப்பு வெறுப்பின்றி, எதுவித பலனும் கருதாது செய்யும் செயல்களே மேலானவை என்று பகவத் கீதையிலே விளக்கப்படுகின்றது. இவ்வகையில் தனது ஆத்மாவை தூய்மைப்படுத்துபவனே யோகி ஆகின்றான். (பகவத் கீதை 5, 10 – 12) இவ்வுலகில் ஒருவர் உயிர் வாழும் வரை செயற்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுத்தப்படுகின்றது.

வேலையும் தொழிற்பாடும் கடவுளை வணங்கும் நடவடிக்கைக்கு ஒப்பானவை. அவை சுய ஒழுக்கத்துக்கும் வழிவகுக்கும். தனது சுய இலாபத்தைக் கருதாது வேலையில் ஈடுபடும் பொழுது ஒருவரின் தன்னலம் அற்றுப் போகின்றது. அவரே கர்மயோகி ஆகின்ற ஆளுமைப் பண்பை வளர்த்துக் கொள்ளுகின்றார்.

அறிவு பற்றிய யோக நெறி ஞான யோகமாகின்றது. தன்னைப் பகுத்து ஆராய்தல், தெளிவானதும், உயர்நிலையானதுமாகிய சிந்தனைகளை வளர்த்தல், நல்லவற்றையும் அல்லவற்றையும் வேறு பிரித்தறியும் ஆற்றல், கட்டுத்தளைகளை அறிவால் அறியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன், மாயைக் காட்சிகளிலிருந்து விடுபடல் முதலியவை ஞானயோக ஆளுமையிலே வற்புறுத்தப்படுகின்றன.பக்தியோகம் சமய அனுட்டானங்களுடன் இணைந்தது. சடங்குகள் செய்தல், மந்திரம் மொழிதல், வழிபாட்டு நடவடிக்கைகள் முதலியவை பக்தியோக ஆளுமையுடன் இணைந்தவை, இறைவனை அணிமிக்கும் மந்திரங்களை மனத்தை ஒருநிலைப்படுத்தி பக்தியுடன் உச்சரிக்கும் பொழுது பக்தியோக ஆளுமை முகிழ்கின்றது.

ஹத யோகம் என்பது முழு உடலையும் தூய்மைப்படுத்துதலோடு இணைந்தது. தாவர உணவு, திருமணம் செய்யாமை, சுவாச ஒழுங்கு, வாய், நாசித்துவாரம் முதலியவற்றை சுத்தம் பேணுதல் என்பவற்றின் வழியாக உயர்நிலையான உணர்வுகளை வளர்த்தலும், தியானத்தை மேம்படுத்தலும் இப்பிரிவில் அடங்கும்.

இந்துசமய ஆளுமை உருவாக்கத்தில் ஒவ்வொரு மனிதரதும் முள்ளந்தண்டைச் சுற்றி எழும் குண்டலினி சக்தியின் பிரயோகம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. குண்டலினியை திட்டமிட்டு நெறிப்படுத்தும் ஆற்றல் கொண்டோர் யோகியராவர். தனது உடலையும் உள்ளத்தையும் போதுமான அளவு வலுவூட்டியும் தூய்மைப்படுத்தியும் மேம்படுத்தும் பொழுது முள்ளந் தண்டின் அடிப்பாகமாகிய மூலாதார சக்கரத்திலிருந்து குண்டலினி எழும்பும். இவ்வாறு எழும் குண்டலினி படிப்படியாக அமைந்த சக்கரங்களைக் கடந்து ஏழாவது சக்கரமாகிய உச்சந்தலையை அடையும். இந்நிலையில் ஆழ்ந்து துலங்கும் ஒளியும் அகத்தைப் பிரகாசிக்கச் செய்யும் நிலைமாற்றமும் ஏற்படும்.

இந்து சமயத்தில் விளக்கப்படும் இராஜயோகம் என்பது வினைத்திறன் கொண்ட ஒழுக்க மேம்பாட்டையும் மனக் கட்டுப்பாட்டினையும் குறிப்பிடும். யோக முறைகள் அனைத்தையும் உள்ளடக்கிய இராஜயோகம் பற்றி பதஞ்சலி முனிவர் விரிவாக விளக்கியுள்ளார். தற்கட்டுப்பாடு இராஜயோகத்தின் அடிப்படையாகின்றது. அகிம்சை, சத்தியம், அவாவின்மை, நல்லொழுக்கம் முதலியவை தற்கட்டுப்பாட்டில் இடம்பெறும். தூய்மை, சிக்கனம், கல்வி, பக்தி சரியான செயல் முதலியவை தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்றது. அடுத்ததாக தியான இருக்கை பற்றி பதஞ்சலி முனிவர் விளக்குகிறார். முள்ளந்தண்டை நேராக்கி நீண்ட நேரம் இருத்தல், உடம்பை உறுதியாகவும், அதே வேளை இறுகி உறையாது தளர்வு நிலையில் வைத்திருத்தல் முதலியவை தியான இருக்கையிலே குறிப்பிடப்படுகின்றன. (யோக சூத்திரம். II, 46 – 47) உன்னதமான வலுவைத் தமது கட்டுப்பாட்டின் கீழே வைத்திருத்தல். இராஜயோகத்தில் விரிவாக விளக்கப்படுகின்றது. மேலும் பிரநாயம என்று கூறப்படும் சுவாச ஒழுங்கை யோக அனுட்டானங்களால் நெறிப்படுத்த வேண்டியுள்ளது. தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியவாறு சுவாசத்தை நிறுத்தவும், இயக்கவும் வல்ல கட்டுப்பாடுகளை யோகியர் கொண்டிருந்தனர்.

இராஜயோக விளக்கத்தில் அடுத்ததாக குறிப்பிடப்படுவது புலன் கட்டுப்படுத்தும் ஆற்றலாகும். புறத்தூண்டிகளால் தாக்கப்படாதவாறு தமது ஐம்புலன்களையும் தூய்மையாக்கி அதன்வழியாக உள்ளத்தைச் செழுமைப்படுத்தல் உள்ளார்ந்த ஆக்கமாகின்றது. (யோக சூத்திரம், II, 54) இதனைத் தொடர்ந்து இடம்பெறுவது கவனத்தைக் குவியப்படுத்தி நிற்றலாகும். புலன்களை கட்டுப்படுத்துதல் மனதைக் குவியப்படுத்தலுக்கு அடிப்படையாகின்றது. இவ்வாறாக மனத்தை ஒரு நிலைப்படுத்தி தியானத்தை யோக அனுட்டானத்தின் உள்ளடக்கமாகவும், சராம்சமாகவும், இலக்காகவும் அமைக்கும் ஒளிவீச்சிலே சமாதி உன்னதம் எட்டப்படுகின்றது.

இந்நிலையில் தன்னை அறிதல் பளிச்சீடு கொள்கின்றது. தன்னை அறிதல் என்பது முடிவிலியாகிய பொருளாகின்றது. தன்னை அறியும் ஒளிர்வு நிலை நிறைவு நிலை அன்று. அது ஒரு நிலைத்து முற்றுப்பெற்ற நிலையுமன்று. அது தன்னை உணரும் பரிபூரண நிலையாகின்றது.

யோக நிலையில் தன்னை உணர்த்தலும், தனது ஆளுமையை வளர்த்துக் கொள்ளலும் இயல்பினர் பின்வருமாறு விளக்கப்படுகின்றனர்.

1. கர்மயோகி – தற்கட்டுப்பாட்டைப் பேணுதலும், தன்னலமற்ற சேவையும், சித்த வலுவும் கொண்ட ஆளுமைப் பரிமாணங்களைக் கொண்டவர் கர்மயோகியாவர்.

2. பக்தியோகி – சித்தமெல்லாம் இறைவன் பால் வைத்த வழிபாடுகளோடு தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் ஆளுமைப் பரிமாணங்களைக் கொண்டவர் பக்தியோகியாவார்.

3. ஞானயோகி – தன்னை அறிதல், தெரிந்து பிரித்தறிதல், முதலியவற்றைக் கொண்டவர் ஞானயோகியாவார்.

அறியாமையே துன்பங்களுக்குக் காரணமாகின்றது. அறியாமையாற் செய்யும் கருமங்கள் தொடர்ந்து துன்பங்களை வரவழைத்த வண்ணம் இருக்கும். ஆன்மாவையும் உடலையும் வேறு பிரித்தறியாமற் செயற்படும் பொழுது ஆணவம் மேலோங்குகின்றது.

பாரம்பரிய இந்துசமயக் கோட்பாடுகள் மனித ஆளுமை மேம்பாட்டில் இசைக் கல்விக்கும், நடன கல்விக்கும் சிறப்பார்ந்த இடத்தை வழங்கியுள்ளன. மனித வலுவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அனுபவங்களுக்குள் நுழைக்காது தெய்வீக ஈடுபாடுகளுக்கு இட்டுச் சென்று ஆளுமையை மேம்படுத்துவதற்கு இசையும் நடனமும் வடிவமைக்கப்பட்டன. மணிவாசகரின் "ஆடுகின்றிலை, கூத்துடையான் கழற்கு அன்பிலை, என்புருகிப் பாடுகின்றிலை" என்ற அடிகள் மேற்கூறிய கருத்தை மீள வலியுறுத்தும்.

தன்னை உணர்வதற்கும் நல்லவற்றையும் அல்லவற்றையும் வேறுபிரித்துப் பார்ப்பதற்கும், இறையனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் அவற்றின் வழியான ஆளுமை வளர்ச்சிக்கும் இசை நடன அறிகை அமைப்புகள் பயன்படுத்தப்பட்டன.

பாரம்பரியமான இந்து சமய கோட்பாடுகளின் வழியாக விளக்கப்படும் ஆளுமைக் கோட்பாட்டில் தன்னைத் தானே தேடும் இலட்சியப் பாங்குகள் மேலோங்கியுள்ளன. மேலைப்புலக் கோட்பாடுகள் உலகியல் அடிப்படைகளை முதன்மைப்படுத்தி ஆளுமையை விளக்கியுள்ளன. உலகியல் நிலைப்பட்ட எறிவுகளிலிருந்து ஆளுமைப் பரிமாணங்கள் அங்கு இனங்காணப்படுகின்றன. அங்கு இடம்பெற்ற செல்வக் குவிப்பும் தனிச் சொத்துரிமையும், உலகியலையும் தனி மனிதரையும் தொடர்புபடுத்திய ஆளுமை இனங்காணலை முன்னெடுத்தன ஆனால் மார்க்சிய நவமார்க்சிய அணுகுமுறைகளே அவற்றுக்கு மாறுபாடாக அமைந்தன.

இந்தியாவின் சமூக பொருளாதார நிலைகளை அடியொற்றி வளர்ச்சியுற்ற வருணப்பாகுபாடும், அவற்றை உள்வாங்க முயன்ற சமயச் சிந்தனைகளும் தனி வாழ்க்கை, இல் வாழ்க்கை, வனவாழ்க்கை, துறவு வாழ்க்கை என்றவாறான வாழ்க்கை நீட்சிச் சிந்தனைகளும் மனிதர்களைச் சமூகத்திலிருந்து பிரித்தெடுத்த தனியுணர் வினராகச் சித்தரிப்பதற்கே அழுத்தங்களைக் கொடுத்தன.

**References**


- Danielou, A.(1995) Yoga; The Method of Re-Integration, University Books.
- Eliade, M(1969) Yoga; Immortality and Freedom, Princeton, Princeton University Press.
- Majumdar (1964) Introduction to Yoga Principles and Practices, New Hyde Parle NY, University Books.
- Nikhilanda, Swami (1964) The Upanishadas, New York, Harper and Row
- Purohit Swami and Yeats (1965) trans, The Geetha, London, Faber



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு அன்னை சாரதாதேவி அவர்களின்
150வது ஜெயந்தி விழாவையொட்டி
கல்லூரியின் இந்து மன்றத்தால் நடாத்தப்பட்ட நிகழ்வுகள்



சுவாமி ஆத்மகணானந்தா அவர்கள் மங்கல விளக்கேற்றி
நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைக்கின்றார்



விழாவுக்கு வருகை தந்த சுவாமிகளும், ஏனையவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமிகளை கல்லூரி மாணவிகள் வரவேற்கும் காட்சி



விழாவில் எமது கல்லூரி மாணவிகள்
வழங்கிய பஜனை நிகழ்வில் ஒரு காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
அன்னையின்
திருவுருவச் சிலை



அன்னையின்
திருவுருவச் சிலை நகர்வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் ஒல்லாந்தர் காலச் சைவத்தமிழ் எழுச்சி

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

"ஈழத்தில் சைவத்தமிழ் எழுச்சி" என்றதும் உடனடியாக எமது ஞாபகத்துக்கு வருவது 19 ஆம் நூற்றாண்டில் நாவலரைத் தலைமையாகக் கொண்டு நடந்தேறிய கிறிஸ்தவ மதமாற்றத்துக்கு எதிரான போராட்டமாகும். ஆனால் 19 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த சைவத் தமிழ் எழுச்சிக்கு முன்னதாக – ஒரு வகையில் முன்னோடியாக – 18 ஆம் நூற்றாண்டில் - ஒல்லாந்தர் காலப்பகுதியில் - ஓர் எழுச்சி ஆர்ப்பாட்டமின்றி நடைபெற்றிருக்கின்றது. இச் சைவத்தமிழ் எழுச்சிக்கான பின்னணிகள். அவ் எழுச்சியின் பின்னணியில் நின்றோர். அவர்களின் பங்களிப்புகள், அதன் விளைவுகள் என்பன பற்றிய சுருக்கமான அறிமுகம் ஒன்றை இக்கட்டுரையினூடாக முன்வைக்க முயல்கிறேன்.

ஈழத்தில் ஒல்லாந்தர் தமது செல்வாக்கினை நிலைநாட்டுதற்கு முன்பாக ஆதிக்கம் பெற்றிருந்தவர்கள் போத்துக்கேயர்கள். அவர்களுடைய ஆட்சிக்காலம் ஈழத்தின் சமூக பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் செழிப்பானதாக அமையவில்லை போத்துக்கேயரின் ஒழுங்குபடுத்தப்படாத பொருளாதாரக் கொள்கையும், தம் மதத்தைச் சுதேசிகள் மத்தியில் திணிக்க வேண்டும் என்ற நிலைப்பாடும் ஈழத்து மக்களின் வாழ்வியலில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின. பொருளாதார ரீதியாக நாட்டின் நலன் கருதி அவர்கள் எந்த ஒரு அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபடவில்லை. மாறாக மக்களிடம் வரிகளை இலக்கின்றி அறவிட முயன்றனர். இதனால் மக்கள் வரிச்சுமையையும் பொருளாதார ரீதியான இடர்பாட்டையும் எதிர்கொள்ள வேண்டியவர்களானார்கள். சமயத்தைப் பொறுத்தவரை, தமது கத்தோலிக்க மதப் பரம்பலை விரைவுபடுத்தும் முகமாக சுதேச மதங்களுக்கும் சுதேச வழிபாட்டு முறைகளுக்கும் அவர்கள் முற்றாகத் தடை விதித்திருந்தனர். மத வழிபாட்டின் மீது ஏற்படுத்திய தடையானது மக்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் முற்றாகப் புறக்கணித்த சர்வாதிகார நிகழ்வாக அமைந்தது. அல்லாமலும், சுதேச மக்களின் வழிபாட்டிடங்கள் போத்துக்கேயரால் அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்ட ஆலயங்களின் கற்கள், அலங்காரப் பொருட்கள் முதலானவை கோட்டைகளையும் தேவாலயங்களையும் அமைக்கப் பயன்படுத்தப்பட்டன. மக்கள் கத்தோலிக்க மதத்தைச் சாருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். மறைவாகச் சுதேச மத சடங்காசாரங்களைப் பின்பற்ற முயன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் தண்டிக்கவும்பட்டனர். இத்தகைய இறுக்கமான சூழ்நிலையில் இந்துமதமும், இந்துப் பண்பாடும் கீழ் நிலையடைந்தன.

ஆனால் ஒல்லாந்தர் காலத்தில் இவ் இறுக்கமான சூழ்நிலையில் சற்றுத் தளர்ச்சி ஏற்பட்டது. இதற்கு ஒல்லாந்தர்களின் ஆட்சிச் சூழலில் கிடைக்கப்பெற்ற அனுகூலங்களே காரணம் எனலாம். ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைப் போல அந்நிய நாட்டவரே எனினும் அவர்களது ஆட்சியும், சுதேச மக்கள், மதங்கள் மீதான அணுகு முறைகளும் வேறுபட்டவையாக அமைந்தன. போர்த்துக்கேயரைப் போலவே கிறீஸ்தவத்தை இவர்கள் பரப்ப முயன்றனரேயாயினும் போர்த்துக்கேயரைப் போன்ற கடுமையான அணுகு முறைகளை இவர்கள் பின்பற்றவில்லை.

இங்ஙனம் ஒல்லாந்தரின் அணுகு முறைகளில் நெகிழ்சி ஏற்பட ஒரு காரணமுண்டு. ஒல்லாந்தர்கள் கம்பனி ரீதியாகச் செயற்பட்டவர்கள். வர்த்தக விரிவாக்கத்தையும், இலாப மீட்டுதலையும் இவர்கள் தம் முக்கிய நோக்காகக் கொண்டிருந்தனர். இதனால் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாக அமைப்புமுறை சிறந்த பொருளாதாரக் கட்டுமானம், நன்கு செப்பனிடப்பட்ட நீதிமுறைமை என்பன இவர்களிடம் இருந்தன. எனவே போர்த்துக்கேயரைப் போல் அவர்கள் தம் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் எதனையும் செய்ய முடியாதிருந்தது. மேலும் வர்த்தகத்தில் இலாபம் ஈட்டுதலை முக்கிய நோக்காகக் கொண்டு செயற்பட்ட இவர்கள் சுதேசிகளுடன் முரண்பட்டு வர்த்தகச் செயற்பாட்டில் இடையூறுகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. பதிலாக சுதேசிகளுக்குச் சில சலுகைகளை வழங்கி அதன் மூலம் தமது வர்த்தக நோக்கைச் செவ்வனே நிறைவு செய்துகொள்ள விரும்பினர்.

1. சுதேச பொருளாதாரத்தை விருத்தி செய்யும் முகமாகப் பயிர்ச் செய்கைகளை ஊக்குவித்தல், புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல்.

2. சுதேச மதங்களின் மீது விதிக்கப்பட்டிருந்த தடையினை நீக்குதல்

3. நீதிமன்றங்களை ஸ்தாபித்து சட்டக் கோவைகளை உருவாக்கி மக்களுக்குத் தகுந்த நீதி கிடைக்கச் செய்தல்.

4. தமது பாடசாலைகளில் சுதேசிகளும் கல்வியறிவு வழங்க ஏற்பாடுகளைச் செய்தல்

என்பன அச்சலுகைகளில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவைகளாகும். இச்சலுகைகளில் அவர்களின் சுயநலமே நோக்கமாக வெளிப்பட்டு நின்றபோதிலும் சுதேசிகளும் இதனால் குறிப்பிடத்தக்க அளவு நன்மைகளைப் பெற்றார்கள் என்பதனையும் மறுப்பதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் சுதேச மக்கள் மதங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை ஒல்லாந்தர் நீக்கியதானது சமயம் சார்ந்தும் தமிழ் இலக்கியம் சார்ந்தும் புதியதோர் எழுச்சி ஒன்று ஏற்படுவதற்கு வித்திட்டது. போர்த்துக்கேயர் காலத்தில் அடங்கிக்கிடந்த சமயப்பற்றும் புதுவேகமும், புத்துணர்வும் பெற்று மேற்கிளம்பிய காலகட்டமாக ஒல்லாந்தர் காலத்தைக் குறிப்பிடலாம். இந்த எழுச்சியின் பின்னணியிலேயே

1. அழிக்கப்பட்ட ஆலயங்கள் புனரமைக்கப்பட்டன.
2. அவ் ஆலயங்கள் மீது மக்களைப் பக்தி கொள்ளச் செய்ய பெருமளவிலான பக்தி இலக்கியங்கள் படைக்கப்பட்டன.
3. மக்கள் மறந்து போய்விட்ட சடங்குகளையும் விரதங்களையும் ஞாபகப்படுத்தும் நோக்கில் இலக்கியங்கள் செய்யப்பட்டன.
4. சமய உணர்வினை வளர்க்கும் நோக்கிலான கோவில்களிலோ அல்லது வீடுகளிலோ பாராயணம் செய்யத்தக்க இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

இவ்வாறான இந்துமதம் சார்ந்த நடவடிக்கைகள் ஒல்லாந்தர் காலத்தில் முடுக்கி விடப்பட்டிருந்தன. இவ் எழுச்சியும் அது சார்ந்த நடவடிக்கைகளும் அக்காலத்தில் எழுந்த இலக்கியப் படைப்புகளினூடாகவே வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். வரதபண்டிதர், நல்லூர் சின்னத்தம்பிப்புலவர், இணுவில் சின்னத்தம்பிப்புலவர், கணபதி ஐயர், வீரக்கோன் முதலியார் என இன்னும் பலர் தங்களை இவ் எழுச்சியுடன் இனங்காட்டிக் கொண்டனர். ஆயினும் இவ் எழுச்சியானது கிறீஸ்தவத்துக்கு எதிரானதொன்றாக அமையாது தமது மதம் பண்பாடு என்பவற்றை மீள் புத்துருவாக்கம் செய்யும் நோக்கில் அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பண்பே பதினெட்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சைவத்தமிழ் எழுச்சியை, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுக நாவலரைத் தலைவராகக் கொண்டு நிகழ்ந்த சைவத்தமிழ் எழுச்சியில் நின்றும் பிரித்தறிய வைக்கின்றது. ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் சிலர் சமய சமரச நோக்கோடு இலக்கியங்களைப் படைத்துள்ளமையும் இவ்விடத்தில் காட்டத்தக்கதாகும்.

## III

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த ஒரு சில இலக்கியங்கள் தவிர ஏனைய அனைத்தும் இந்துமதம் சார்ந்தனவாகவே விளங்கின. அரச ஆதரவோ அல்லது நிறுவன ரீதியான பிற ஆதரவோ இல்லாத நிலையிலும் அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் மதப்பற்றினால் தூண்டப் பெற்று இலக்கியங்களைப் படைத்திருக்கின்றனர். இவ்வாறான இந்துமதம் சார்ந்த இலக்கியப்படைப்புகள் பெரும்பாலும் சிற்றிலக்கிய வகை சார்ந்தனவாகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தன. ஏலவே அறிமுகமாகியிருந்த சிற்றிலக்கிய வகைகளோடு புலவர்கள் புதிய இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்தி மத உணர்வை வளர்க்க முயன்றிருக்கின்றனர்.

| இலக்கிய வகை | நூல் | ஆக்கியோர் |
|---|---|---|
| தூது | பஞ்சவன்னத்தூது<br>கிள்ளை விடு தூது | இணுவை சின்னத்தம்பிப்புலவர்<br>நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் |
| ஊஞ்சல் | சிவகாமியம்மன் திருவூஞ்சல்<br>கயிலாய நாதன் திருவூஞ்சல்<br>சுப்பிரமணியர் திருவூஞ்சல்<br>வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திர காளியம்மை திருவூஞ்சல் | இணுவை சின்னத்தம்பிப்புலவர்<br>கணபதி ஐயர் |
| பதிகம் | சிவகாமியம்மன் துதி<br>கயிலாயநாதன் தோத்திரம்<br>மறியற் கொச்சகம் | இணுவை சின்னத்தம்பிப்புலவர் |
| பள்ளு | பறாளை விநாயகர் பள்ளு | நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் |
| அந்தாதி | மறைசையந்தாதி<br>கல்வளை அந்தாதி<br>புலியூர் அந்தாதி | நல்லூர் சின்னத்தம்பிப்புலவர்<br>மயில்வாகனப்புலவர் |
| காதல் | சித்திரவேலாயுதர் காதல் | வீரக்கோன் முதலியார் |
| புராணம் | சிவராத்திரி புராணம்<br>ஏகாதசிப் புராணம்<br>பிள்ளையார் புராணம்<br>பிள்ளையார் கதை | வரத பண்டிதர் |

இக்காலத்தில் எழுந்தவையாக அறியப்பட்டும் இன்று கிடைக்கப் பெறாத சைவசமயம் சார்ந்த சிற்றிலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சி
வட்டுநகர் பிட்டிவயற் பத்திரகாளியம்மை பதிகம் — கணபதி ஐயர்

சித்திவிநாயகர் திருவிரட்டை மணிமாலை
நல்லைக் கலி வெண்பா — கூழங்கைத்தம்பிரான்

வரணி தல்வளை விநாயகர் வெண்பா — அச்சுவேலி நமசிவாயப்புலவர்.

சிற்றிலக்கிய வடிவங்கள் இக்காலத்தில் மத உணர்வை வளர்க்க அதிகம் பயன்படுத்தப் பட்டதற்கு சில காரணங்கள் உண்டு.

1. மக்களுக்கு உடனடியாக மத அறிவும், மத உணர்வும் ஊட்ட வேண்டிய தேவை புலவர்களுக்கு ஏற்பட்டது. ஏறத்தாழ நாற்பது வருடங்கள் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் தம் மத உணர்வை இழந்து வாழ்ந்த மக்களுக்கு மீண்டும் மத உணர்வை ஊட்டுவதும் மறந்து போய்விட்ட சடங்காசாரங்களை நினைவூட்ட வேண்டியதும் புலவர்களின் பெருங்கடமையாக இருந்தது. இவ் உடனடித் தேவையை அவர்கள் காலதாமதமின்றிச் செய்ய விரும்பினர். நீண்ட புராணங்களை அல்லது பாரிய இலக்கியப் படைப்புகளை உருவாக்குவதோ அல்லது அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதோ உடனடிச் சாத்தியமாகாது என்பதை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். இதனால் பக்தி உணர்வை வளர்க்க சிற்றிலக்கியங்களை அவர்கள் பெரிதும் நாடினர். இக்காலத்தில் எழுந்த விரத புராணங்களான சிவராத்திரி புராணம், ஏகாதசிப்புராணம், பிள்ளையார் கதை முதலானவை 'புராணம்' என்னும் சொல் ஈற்றைக் கொண்டனவாக அமையினும் அவற்றை புராணங்கள் என ஏற்றுக் கொள்ளலாமோ என்பது ஆய்வுக்குரியதாகிறது. வடமொழிப்புராணங்களுடனும் பின்னர் வடமொழி மரபு தழுவித் தமிழில் தோன்றிய புராணங்களுடனும் இவற்றை ஒப்பிடும் போது இவற்றைப் புராணங்களாகக் கொள்ள முடியவில்லை. புராண மரபுக்குரியனவெனக் கருதப்பட்ட சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், வம்சானுசரிதம், மனுவந்தரம் என்னும் இலக்கணங்களும் இவற்றில்லை ஆக, மக்களுக்கு வேண்டிய சமய அறிவினைக் - குறிப்பாக விரதங்கள் பற்றிய விளக்கங்களை அளித்தற் பொருட்டு குறிப்பிட்ட விடயம், சார்ந்ததாகப் பல்வேறு புராணங்களில் கூறப்பட்ட கருத்துக்களையும் ஒன்று திரட்டி புதிய மொழியில் வெளி வந்த புதிய இலக்கிய வடிவங்களாகவே இப்புராணங்கள் அமைந்தன.

"செந்தமிழ் முனிவன் செப்பிய காதையும்
கந்த புராணக் கதையிலுள் ளதுவும்
இலிங்க புராணத் திருத்தநற் கதையும்
உபதேச காண்டத் துரைத்தநற் கதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுத் தொன்றாயத் திரட்டி ஐங்கரற்கு
வாய்த்தநல் விர மான்மிய முரைத்தான் .....”

எனவரும் பிள்ளையார் கதைச் சிறப்புப் பாயிரச் செய்யுள் இந்த வகையில் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

2. மக்கள் விரும்பிப் படிப்பதற்கும், மனனம் செய்வதற்கும் தினந்தோறும் ஓதி மகிழ்வதற்கும் ஏற்ற வடிவங்களாகச் சிற்றிலக்கியங்கள் அமைந்துள்ளமை நோக்கத் தக்கது. விரத புராணங்களுள் ஒன்றான வரத பண்டிதரின் பிள்ளையார் கதை யாழ்ப்பாணத்தில் விநாயகர் சஷ்டி காலத்தில் இருபத்தொரு நாளும் பாராயணம் பண்ணப்பட்டு வருவது இதற்குச் சிறந்த சான்றாகும். இவ்விரத புராணத்தின் செல்வாக்கால் விநாயகர் சஷ்டி என்னும் விரதம் கூட ‘பிள்ளையார் பெருங்கதை’ என்றே குறிக்கப்பட்டு வருதல் நோக்கற்பாலது. ஏகாதசிப்புராணம், சிவராத்திரிப் புராணம் என்பனவும் கூட கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை கோவில்களில் விரத காலங்களில் பாராயணம் செய்யப்பட்டு வந்தமைக்குச் சான்றுகளுண்டு. வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை முதற் கொண்டு இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் வரையிலான வித்துவான்கள் பலர் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

3. முன்னர் குறிப்பிட்டது போல, புலவர்கள் பாரிய இலக்கிய ஆக்க முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற பகைப்புலம் ஒல்லாந்தர் காலத்தில் இருக்கவில்லை. அதாவது அரச ஆதரவோ, நிறுவன ரீதியான ஆதரவோ இல்லாத நிலையில் இவர்கள் தம் கைப்பொருளையே நம்பி இலக்கிய ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டனர். இவர்களுள் சிலர் ஒல்லாந்தர்களது நிர்வாகத்தில் உத்தியோக அந்தஸ்த்துப் பெற்றவர்கள் (இணுவில் சின்னத்தம்பிப் புலவர்). வேறும் சிலர் இந்நிர்வாக உத்தியோகத்தர்களின் பரம்பரையில் வந்தவர்கள் (நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்). எனவே இவர்கள் தம் இலக்கிய படைப்புகளுக்கு அவர்களது பொருளாதார நிலையே கைகொடுத்தது. அன்றியும் வேறுஞ்சில புலவர்கள் உள்ளூர்ப் பிரபுத்துவத்தின் ஆதரவையும் பெற்றிருந்தனர். எனினும் அவர்களாலும் பாரிய இலக்கிய ஆக்கங்களை உருவாக்குவதற்கு ஏற்ற பொருள் வளத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இதனால் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் அரச ஆதரவுடன் எழுந்தது போன்ற பாரிய இலக்கிய படைப்புகளை இங்கு காண முடியவில்லை. ஆக, பொருளாதார ரீதியான இடர்பாடும், தேக்கநிலையுங் கூட இக்காலத்தில் சிற்றிலக்கியங்களே அதிகம் தோன்ற வித்திட்டிருக்கலாம்.

இங்ஙனம் பெருமளவில் தோற்றம் பெற்ற சிற்றிலக்கியங்கள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தை மட்டும் மையப்படுத்தி எழாமல் நாட்டின் பல பகுதிகளில் நின்றும் எழுந்தமை கவனிக்கற்பாலதாகும். வட்டுக்கோட்டை, சுழிபுரம், கல்வளை, காங்கேசனதுறை, இணுவில, நலலூா முதலான யாழகுடாநாட்டின் பலவேறு பிரதேசத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலங்களும் பாடல் பெற்றதோடு வெருகல் முதலான இடங்களில் உள்ள தலங்கள் மீதும் பக்திப் பாசுரங்கள் பாடப்பட்டன. இதனால் பக்தி உணர்ச்சி குறிப்பிட்ட ஒரு பிரதேசத்துடன் மட்டும் கட்டுப்பட்டு நின்றுவிடாது, பல பகுதிகளிலும் பரவிச் செல்வாக்குப் பெற்றதை அறியலாம். ஈழத்துப் புலவர்களில் சிலர் (நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், மயில்வாகனப் புலவர்). தமிழகத்துக் கோயில்கள் மீதும் பாடல்களைப் பாடியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

ஆலயங்கள் மீது மக்களைப் பக்தி கொள்ளத் தூண்டுதல் அவர்களுக்குச் சடங்காசரங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல் என்னும் இருபெரும் நோக்கின் அடிப்படையிலேயே இவ்விலக்கியங்கள் எழுதப்பட்டிருத்தலை முன்னர் கண்டோம். ஆலயங்கள் மீது மக்களை பக்தி கொள்ளச் செய்தல் என்ற வகையில்,

1. ஆலயத்தின் பெருமையை எடுத்துக் கூறல்.
2. ஆலயத்தில் கோவில் கொண்டிருக்கும் ஆண்டவனின் அழகு, அருட்சிறப்பு, அற்புதங்களைச் சுட்டுதல்.
3. ஆலயத்தின் வரலாற்றினை மரபுவழிக் கதைகளினூடே கட்டியமைத்தல்.
4. ஆலயச் சூழலின் வனப்புக்களையும் தெய்வீகத்தன்மையையும் புகழ்ந்து பாடல்.

ஆகிய உத்திகளைத் தங்களது பாடல்களில் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். அதேபோல விரத மகிமைகளை எடுத்துரைக்கும் இலக்கியங்களில்,

1. விரத காலம் பற்றிய தகவல்கள்
2. அதை அனுஷ்டிக்கும் முறை
3. அனுஷ்டித்தோர் அடையும் பயன் அவர்தம் விரிவான வரலாறு
4. அனுஷ்டிக்கத் தவறியோர் அல்லது நிந்தித்தோர் எய்திய துயரகதி
5. தெய்வ அருள்

என்பன பற்றி விரிவாகப் பேசப்படுகின்றது. இவை பற்றிய விரிவான தகவல்களும் உதாரணச் செய்யுட்களும் இக்கட்டுரையின் விரிவஞ்சித் தவிர்க்கப்படுகின்றன.

சைவம் - வைஷ்ணவம் என்னும் - இந்துமத உட்பிரிவு – வேறுபாடின்றிப் புலவர்கள் செயற்பட்டிருக்கின்றமை இக்கால எழுச்சியின் மற்றுமோர் அம்சமாகும். சிவராத்திரி புராணம் பாடிய வரதபண்டிதரே ஏகாதசிப் புராணமும் பாடியிருப்பது கவனிக்கத்த க்கதாகும். சைவம் - வைஷ்ணவம் இரண்டும் பன்நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே முரண்பாடின்றி வளர்ந்த வகையை இது எமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

இங்ஙனமாக, ஒல்லாந்தர் காலத்தில் மேற்கிளம்பிய சைவத் தமிழ் எழுச்சியின் அடுத்த கட்டப் பரிணாமமாகவே 19 ஆம் நூற்றாண்டுச் சைவத்தமிழ் எழுச்சியமைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவத்தமிழ் எழுச்சி முனைப்புப் பெறுவதற்கும் அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கம் பல்வேறு மட்டங்களில் உணரப்படுவதற்கும் அத்திவாரம் இட்டுக் கொடுத்தது ஒல்லாந்தர் கால எழுச்சியே எனலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த இந்து சமயப் பற்றுள்ளம் கொண்ட இலக்கிய கர்த்தாக்களின் சிந்தனைகள், செயற்பாடுகள், இலக்கிய ஆக்கங்கள் என்பன பின் வந்தோருக்கு ஆதர்சமாக அமைந்தன. அவர்களின் முன் முயற்சிகளை உதாரணமாகக் கொண்டு இன்னொரு அந்நியராட்சிச் சூழலில் நாவலரும் அவர் தம் பரம்பரையினரும் மாற்றுச் சமயங்கள் மலைக்கும் வண்ணம் மற்றொரு சைவத்தமிழ் எழுச்சியினை நடாத்தி முடித்தனர்.

**பயன்படுத்தப்பட்ட துணை நூல்கள்**

1. **வரத பண்டிதம் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை, 1998.**
2. **கார்த்திகாயினி. ந, இணுவையூர் சின்னத்தம்பிப் புலவர், நி உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்,1988**
3. **சின்னத்தம்பிப் புலவர், கல்வளையந்தாதி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1964.**
4. **சின்னத்தம்பிப்புலவர், மறைசையந்தாதி, சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம், 1939.**
5. **சின்னத்தம்பிப்புலவர், பறாளை விநாயகர்பள்ளு, வித்தியாநுபாலன அச்சகம், சென்னை, 1956.**
6. **மயில்வாகனப் புலவர், புலியூரந்தாதி, சோதிட பிரகாசயந்திரசாலை, யாழ்ப்பாணம். 1970**
7. **சிவலிங்கராஜா. எஸ், ஈழத்து இலக்கியச் செல்நெறி, தனலக்குமி புத்தகசாலை, யாழ்ப்பாணம். 2001**
8. **நடராசா.க.செ, ஈழத்துத்தமிழ் இலக்கிய வளர்ச்சி, கொழும்பு தமிழ் சங்கம், கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவியர் மூவர்

## திருமதி. வசந்தா வைத்தியநாதன்

பராசக்தி எங்கும் நிறைந்தவள். மலரில் மணம் போலவும், பாலில் கலந்திருக்கும் நெய்யாகவும், யாண்டும் நீக்க மற நிறைந்து நிற்பவள். பூரணியாகவும், புராதனியாகவும் இலங்குபவள். ஆதிசங்கரர் அமைத்துத் தந்த அறுவகை சமய நெறிகளிலே "சாக்தம்" சக்தியின் மேன்மையையும் சிறப்பையும் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது. பாரதம் முழுவதையுமே தேவி வழிபாட்டின் நிலைக்களன் என்று கூறலாம். இமயத்தின் கொடு முடியான காஸ்மீரத்தில் ஹுரபவானி, பம்பாயில் மகாலஷ்மி, கூர்ஜரத்திலே கல்யாணி, இராஜபுதனத்திலே பவானி, அஸாமிலே காமரூபி, கல்கத்தாவில் காளி, மைசூரில் சாமுண்டி, தமிழகத்தில் காமாட்சி, கேரளத்தில் பகவதி, கன்யாகுமரியில் கன்னிக் குமரி என பாரத தேசம் முழுவதுமே தனது அருளாட்சியை அவள் நடத்தி வருகின்றாள்.

படைக்கும் தொழிலிற்கு சிவம், சக்தி இரண்டுமே தேவை. உலர்ந்த களி மண்ணைக் கொண்டு பானை வனைய முடியாது களிமண்ணைப் பதப்படுத்த நீர் அவசியமாகின்றது. அது போன்றே பிரபஞ்ச சிருஷ்டியை சக்தியின் துணையின்றி தனிச் சிவமால் ஏற்படுத்த முடியாது. கருவியல்லாது இசையை ஒலிக்க முடியாது. சக்தியின் துணையில்லாது பிரமத்தை அறிந்து கொள்ள முடியாது என்பார் ஸ்ரீ இராம கிருஷ்ணர்

அவளே பிரம்மா அவளே விஷ்ணு அவளே உருத்திரன் அவளே ஈஸ்வரன் அவளே சதாசிவன். இந்த உண்மையை சக்தி வழிபாட்டில் ஊறித்திளைத்தவர்கள் உணர்வார்கள். பராசக்தி மனோவாக்கைக் கடந்து அசையாது சமநிலையில் பரப்பிரமத்தின் அம்சமாக விளங்குவாள். நாமமற்று, உருவமற்று தோன்றாப் பெருநிலையில் தோற்றங் கொள்கிறாள். தோன்றும் நிலையில் நாம ரூபங்களோடு பிரபஞ்சம் முழுவதும் ஊடுருவி நிற்கின்றாள். ஐந்தொழில்களைச் செய்யும் ஐந்து மூர்த்திகளாலும் அன்னையின் திருவருள் இல்லாமல் இயங்கவும் முடியாது.

" ஆகமங்கள் எங்கே அறுசமயம் தான் எங்கே
யோகங்கள் எங்கே உணர்வு எங்கே – பாகத்து
அருள் வடிவம் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யார் அறிவார். பேசு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று திருக்களிற்றுப்படியாரும் அதிசயித்து நிற்கும் அன்னை தரும் அநுபவ அதிசயத்தை சொல்லில் வடிக்க முடியாது. பொருளாகவும், பொருள் முடிக்கும் போகமாகவும் போகம் செய்யும் மருளாகவும், மருளில் வருந்தெருளாகவும் இருக்கும் ஒளிவொளிப் பொருளாகிய பராசக்தியின் திருவடியல்லாது புகல் வேறு இல்லை என்பார் அபிராமிப்பட்டர்.

" கண்ணியது உன்புகழ் கற்பதுன் நாமம், கசிந்து பக்தி
பண்ணியது உன்னிரு பாதாம் புயத்தில் பகலிரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன் செய்த
புண்ணியம் ஏதுஎன்னம் மேபுவி யேழையும் பூத்தவளே"

மும் மூர்த்திகளுக்கும் மூத்தவளாகிய அன்னை பராசக்தியை ஏற்றிப் போற்றும் காலம் இரவுநேரமே.

"ராத்ரீம் ப்ரத்யே ஜனனீம் ஸர்வ பூத நிவேசனீம்
பத்ராம் பகவதீம் க்ருஷ்ணாம் விஸ்வஸ்ய ஜகதோ நிசாம்"

காலமாக இருப்பவள் பகலாகப் பரிணமித்து இரவாக அடங்குகிறாள். புலன்களும் புவனமும் ஒடுங்கும் இரவிலே புவனேஸ்வரி விழித்திருந்து அருள் பாலிக்கின்றாள். ஒன்பது என்பது எண்களில் சிறந்தது, பெரியது அதற்கு மேல் வேறு இல்லை. ஒன்பது இரவுகளிலே தேவியை வழிபடும் வழிபாடே ஒன்பான் இரவுகள் அல்லது நவராத்திரி என்று கூறப்படும்.

நான்கு வகையான நவராத்திரிகள் உண்டு. ஆடிமாதத்திலே நடைபெறுவதை ஆஷாட நவராத்திரி என்றும் புரட்டாசியில் நடைபெறுவதை சாரதா நவராத்திரி என்றும் மாசியில் வருவதை மாக நவராத்திரி என்றும் பங்குனி அல்லது சித்திரையில் வருவதை வசந்த நவராத்திரி என்றும் அழைக்கின்றோம். புரட்டாசியில் வரும் சாரதா நவராத்திரியையே பொது மக்கள் பெரும்பாலும் கொண்டாடி வருகின்றனர். வசந்த நவராத்திரி முன்னேஸ்வரம் போன்ற ஆலயங்களில் சண்டிஹோமத்துடன் மிகச் சிறப்பாக நிகழும்

நவராத்திரி காலங்களில் அன்னையை துர்க்கையாகவும், இலக்குமியாகவும், சரஷ்வதி யாகவும் வழிபடுகின்றோம். முன்பு செய்த வினைப்பயனால் மக்களாகப் பிறந்த நாம் மக்களாக வாழாமல் செந்நெறியில் செல்வதற்கு அடிப்படை ஆதாரங்களாக தேவைப் படுவது மூன்று நிலைகள். முதலிலே வேண்டுவது மனவலிமை. மனவலிமை உடையவனாற்றான் புலன் ஒருமைப்பாட்டுடன் வாழ முடியும்.

" ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுவது வள்ளுவம். ஐம்புலனை வென்றால் அடிப்படுத்தினால் அவனியையே ஆள முடியும். அப்படிப்பட்ட புலனடக்கம் கல்விக்குத் தேவைப்படுகின்றது. கல்விகற்கும் பருவத்தினரை மாணவன், மாணவி என அழைக்கின்றோம். "மாணி" என்ற சொல்லி லிருந்தே மாணவன் என்பது வந்தது. மாணி என்ற சொல்லிற்கு "பிரமச்சாரி" என்பது பொருள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற புலன்களை அதனதன் போக்கிற்கு விடாமல் கட்டி ஆள்வது அவர்களால் மட்டும்தான் ஆழமான நிலையான கல்வியைப் பெற முடியும்.

ஆழம் கொண்ட கல்வியினால் செல்வத்தை ஈட்டலாம். மனவலிமையும் கல்வியும் இருபுறமும் இரு அரண்களாக இருந்து பெற்ற செல்வத்தை நன்னெறியில் போக்கி அதன் மூலம் திருவருளைப் பெற வைக்கின்றது. புண்ணியத்தையும் ஈட்ட முடியும். நல்லவழியில் பெறாத செல்வம் ஆலகால நஞ்சாகி குடும்பத்தையே சுட்டெரித்து விடும் ஆதிசங்கரர் தனது பஜகோவிந்தத்தில் கூறும் பொழுது அர்த்தம் அனர்த்தமாகிவிடும் என்பார். நல்லவனிடம் செல்வம் சேர்ந்தால் அது "ஊருணி நீர்" போல் எல்லோருக்கும் பயன்படும். அல்லாத இடத்து அழிவையே விளைவிக்கும். தமிழிலே செல்வத்திற்குப் பொருள் என்று பெயரிட்டது எத்துணை பொருத்தம் கொண்டது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

நவராத்திரி முறை வைப்பிலும் கூட மனவலிமையையும் வீரத்தையும் நல்கும் கொற்றவையை வணங்கி இடை மூன்று நாட்கள் மனச் செம்மையைத் தரும் செல்வத்தின் அதிதேவதையான செந்திருவை வணங்கி கடை மூன்று நாட்கள் வெள்ளைக் கலையுடுத்தி, வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் கலைமகளை வணங்கினால் வாழ்வில் வெற்றி காணலாம். என்பதைப் பத்தாம் நாள் "விஜயதசமி" உணர்த்துகின்றது.

நமது முன்னோர் இறை உணர்வைக் கூடி நாம் வாழும் வாழ்க்கையோடு பிணைத்து விழாக்களாக்கி படித்தவர் முதல் பாமரர் வரை ஏழை முதல் செல்வந்தன் வரை அனைவரும் கொண்டாடும் முறையில் வகுத்திருப்பது அவர்களுடைய பட்டறிவின் சிறப்பை புலப்படுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனந்தப் பாதை

### திரு.த.மாணிக்கவாசகம்

மாவட்ட வன அலுவலகம்
திருகோணமலை

பயிர்ச்செய்கையை மேற்கொள்வதானால் அதற்குப் பொருத்தமான நிலம் தேவை, நீர் தேவை, மற்றும் பசளை, கிருமி நாசினிகள் போன்றவைகளும் தேவை. இவைகள் அனைத்தும் பெறக் கூடிய வாய்ப்பு இருக்குமானால் அங்கே செய்கை பண்ணப்படும் பயிர் சரியான வேளையில் முளைத்து செழிப்புடன் நோயின்றி வளர்ந்து நல்ல பயனைத் தரும். இப்படித்தான் ஆனந்தம் என்ற பயிரை வளர்க்க வேண்டுமானால் அதற்கேற்ற உளம், உடல், நல்லோர் நட்பு, இறை சிந்தனை என்பன தேவைப்படும்.

நாம் ஏதோ ஒரு கையில் மிகக் குறுகிய காலத்திற்கு அனுபவிப்பதாகக் கூறப்படும் மகிழ்ச்சியை உண்மையான ஆனந்தம் எனக் கொள்ளலாமா? சில நிமிடங்களே அல்லது சில நாட்களுக்கே மாத்திரம் உணரும் இந்த மகிழ்ச்சி அக்காலம் கடந்ததும் மறைந்து விடுவதோடு, மீண்டும் நாம் பழையபடி முன்னர் அனுபவித்த ஓய்வற்ற பரபரப்பு மயமான மகிழ்வில்லாத நிலைக்கே வந்துவிடுகின்றோம். ஆகவே நமது வெளிப் பார்வைக்கு துன்பமே நிரந்தரமானதொன்றாக தென்படுவதோடு இதன் மீட்சி தற்காலிகமானதாகவே தோற்றமளிக்கின்றது. இது ஒரு விதமான மாயை வெளிப்பாடுதான்.

உண்மைநிலை முற்றிலும் வேறுபட்டதாகும். நாம் வதியும் வீடுகளை மாற்றுவதாலோ அல்லது வீதிகளையும், ஊர்களையும், நாடுகளையும் மாற்றுவதாலோ எந்தப் பயனும் இல்லை. இத்தகைய பௌதீக மாற்றங்கள் பயனற்றவை. சாதாரண மனிதனாக இருந்தவர் நாட்டின் பெருந் தலைவராக மாறிவிட்டார் என்றால் அவர் மகிழ்ச்சியின் எல்லையிலே திளைத்திருக்கிறார் என்ற அர்த்தமன்று. சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை சுதாகரித்து வாழவல்லவன், வாழ்வான் எனப் பரிணாம வளர்ச்சி கூறினாலும் அவர் பரம்பரையாக தொடரும் நிகழ், எதிர்கால போட்டியாளர்களிலும் ஒருவர் என்பதை மறக்கலாகாது. எனவே இத்தொடரும் போராட்டம் அவரின் நிரந்தர நிம்மதிக்கும் மகிழ்ச்சிக்கும் என்றும் வழிவகுக்காது.

உடல் ஆரோக்கியம் பற்றிய சிந்தனைகள், குடும்ப பொருளாதாரம் பற்றிய சிந்தனைகள், வாழும் சுற்றாடல் பற்றிய சிந்தனைகள், தேடும் பாதுகாப்பு பற்றிய சிந்தனைகள், செய்யும் தொழில் பற்றிய சிந்தனைகள், எதிர்கால முன்னேற்றம் பற்றிய சிந்தனைகள் என மனிதன் சிந்தித்துக் கொண்டே இருக்கின்றான். இச்சிந்தனைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக ஊக்கம். பயம். கோபம். வெறுப்பு. விருப்பு போன்ற பல உணர்ச்சிகளின் தோற்றப்பாடுகளுக்கு உள்ளாகின்றான். இவ்வுணர்ச்சிகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதோடு ஏதோ ஒன்றிரண்டின் வெளிப்பாடுகள் தெளிவானதாக தென்படும். அவ்வாறில்லாமல் குழப்ப நிலை தோன்றும் போது மனித மனம் மிகவும் சோர்ந்து போய்விடுகின்றது. இச்சோர்வு மனத்தளர்ச்சியை உருவாக்குவதுடன் உடல் நலத்தையும் உருக்குலைத்து எதிர்காலத்தையும் பாதிப்படையச் செய்கின்றது. அவ்வாறாயின் ஆரோக்கியமான சிந்தனைகள் எவ்வாறு அமைய வேண்டுமென நாம் எண்ணத் தோன்றுகிறது.

இந்த வேளையில் தான் நாம் மனத்தையும் உடலையும் வேறுபடுத்திப் பார்த்து, அதற்கு அப்பாலும் நகர்ந்து ஆன்மாவைப் பற்றிய அறிவையும் தேடவேண்டி உள்ளது. இத்தகைய தேடலை வெளிக்கொணர்வதுதான் ஆன்மீகம். ஆன்மீகம் ஆன்மாவுக்கும் பரப்பிரமத்துக்கும் இடையே உள்ள பாலமாகத் திகழ்கிறது.

உடலின் இயக்கங்களுக்கு இந்திரியங்கள் காரணமாக அமைகின்றன. இந்த ஐம்பொறிகளையும் நாம் படிப்படியாக அடக்கப் பழக வேண்டும். இதற்காகவே தியானப் பயிற்சிகள் பயன்படுகின்றன. ஐம்புலன்களின் கட்டுப்பாட்டினால் மனோசக்தி அதிகரிக்கின்றது. இந்த மனோசக்தியின் பயன்பாட்டை முனிவர்கள், ரிஷிகள் என்போர் மிகவும் நன்றாக அறிந்திருந்தார்கள் மிகச் சிலருக்கு இயற்கையாகவே இச் செயற்பாடு மிகவும் எளிதாக கைகூடுகிறது. சுவாமி விவேகானந்தர் சிறு வயதில் தூங்கும் போது தனது இரு புருவங்களுக்கும் இடைப்பட்ட பகுதியின் மத்தியிலே ஓர் ஒளிப்பந்து தோன்றுமாம். இப்பந்தைப் பார்த்தவாறே அதில் கரைந்துபோய் தூங்கிவிடுவாராம். எல்லோருக்கும் இப்படித்தான் தூக்கம் வருகின்றது போலும் என எண்ணியிருந்தாராம். கதவை தாழிட்டுக் கொண்டு தியானம் செய்யும் போது இத்தகைய பரவச நிலையை மிக விரைவிலேயே பெற்றுவிடுவாராம். இதன் காரணமாகத்தான் இவரால் மிகக் குறுகிய காலத்தே எத்தனையோ புத்தகங்களை விரைவாக வாசித்து அறிந்து கொள்ளும் திறமையை பெற்றிருந்தார், பல மொழிகளும் கைகூடப் பெற்றார். இவை எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் மனக்கட்டுப்பாடே ஆகும். "மனம் தூய்மையாக இருக்கும் அளவுக்கு அதை எளிதில் அடக்க முடியும். மனத்தை அடக்குவதற்கு வேண்டப்படுவது நல்லொழுக்கம். முற்றிலும் ஒழுக்கம் உள்ள ஒருவன் அதற்கு மேல் எதுவும் செய்ய வேண்டியதில்லை. அவன் "முக்தன்" என சுவாமி விவேகானந்தர் ஞானதீபத்தில் கூறியுள்ளார். இந்த ஒழுக்கத்தைப் பேணமுடியாது தடுப்பவைதான் ரஜஸ், தமஸ் குணங்களுக்குரிய பொறாமை, வெறுப்பு, கோபம், பயம், காமம், கர்வம், பணம் - சொத்துக்களுக்கான ஆசை, ஏமாற்றுதல் போன்ற அனைத்தும். இவை மன அமைதியை அழித்து விருப்புவெறுப்பினை தூண்டிக்கொண்டேயிருக்கும். எமது ஸ்தூல சரீரத்திலே உள்ள இந்த சூட்சும சரீரமான மனம் தனக்குப் பின்னே மெய்ப்பொருளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவைக் கொண்டிருக்கிறது. இந்த ஆன்மா உள்ள இடம்தான் ஆனந்தத்தின் இருப்பிடம். "ஆசைகளை அழிக்க முடியாது ஆனால் அவைகளைத் திசைதிருப்ப முடியும்" என பரமகம்சர் கூறுகின்றார். ஆசைகளை தாழ்ந்த விடயங்களில் செலுத்தாது உயர்ந்த நோக்கங்கள் உள்ள விடயங்களில் திசை திருப்ப வேண்டும். பரமானந்தப் பரம்பொருளான இறைவனுடன் இந்த ஆசையை இணைத்தோமானால், இறைவனை நாடும் மிக உயர்ந்த நிலைக்கு நாம் உந்தப்படுவோம்.

"ஆனந்தத்தின் இருப்பிடம், ஆன்மாவின் இருப்பிடமே" எனக் கூறும் தைத்திரீய உபநிடதம் "நிச்சயமாக எல்லா உயிரினங்களும் இந்தப் பேரானந்தத்தில் இருந்தே பிறந்துள்ளன, வாழ்கின்றன, இறந்தபின்பும் அதே பேரானந்தத்தை அடைகின்றன" எனவும் கூறுகின்றது. மனிதனின் உண்மையான இயல்பு பேரானந்தத்தை அடைய முயல்வதுதான். ஆனால் மனிதன் ஆன்மாவை நாடாது, மனம் - உடலை நாடி நிற்பதால் பற்றுக்கள் தவறான பாதையில் திசைதிருப்பப்பட்டுள்ளன. இதனாலேயே துன்பத்தில் உழல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எல்லையற்ற ஆனந்தம் தன்னில் இருக்கும் ஆன்மாவிலேயே அடங்கியுள்ளது என்பதை உணர்ந்ததும் அவன் அனைத்து துன்பங்களில் இருந்தும் விடுதலை பெறுகின்றான். எனவே இத்தகைய உயர்வான ஆனந்த நிலையினைப் பெற கட்டுப்படுத்தப்பட்ட மனத்தினைப் பெறும் அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் தரும் நவராத்திரி

திருமதி.அ.வேலாயுதம்
ஆசிரிய ஆலோசகர் (சைவ சமயம்)
வலயக்கல்வி அலுவலகம்
திருகோணமலை

சக்தி வழிபாட்டுக்குரிய விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம், பௌர்ணமி விரதம், நவராத்திரி விரதம் என்பன மிகவும் முக்கியமானவை. நவராத்திரி என்பது விரதமிருந்து கொண்டாடப்படுகின்ற விரத விழா. சிவனை வழிபடத்தகுந்த ஒரு ராத்திரி சிவராத்திரி. சக்தியை வழிபடத் தகுந்த ஒன்பது ராத்திரி நவராத்திரி. வீட்டிலே கொண்டாடப்படும் நவராத்திரி, அந்த வீடு என்ற கோயிலுக்கு ஒரு "பிரமோற்சவம்" என்று சொல்லலாம்.

நவராத்திரி வழிபாடு பெண்களுக்குரியது. எல்லா வயதுடைய பருவத்தைச் சார்ந்த பெண்கள் அனைவரும் நவராத்திரி வழிபாட்டில் பங்கு பற்றுகின்றார்கள். நவராத்திரி வழிபாட்டால் பெண் குழந்தைகள் பெறுவது மகிழ்ச்சிப்பயன், கன்னிகள் பெறுவது திருமணப் பயன், சுமங்கலிகள் பெறுவது மாங்கல்யப் பலப் பயன், மூத்த சுமங்கலிகள் பெறுவன மனமகிழ்ச்சி. மனவமைதி, மனநிறைவு எல்லோரும் பெறுவது பரிபூரண திருப்தி

நவராத்திரி காலத்தில் வீடுகளில் கொலு வைப்பார்கள். இந்தக் கொலு வைப்பதில் ஒரு ஆழ்ந்த தத்துவம் உள்ளது. இந்தக் கொலு மொத்தம் ஒன்பது படிகளைக் கொண்டிருக்கும். இதில் முதல் மூன்று படிகள் தமோ குணத்தைக் குறிப்பவை, அதற்கடுத்த மூன்று படிகள் ரஜோ குணத்தைக் குறிப்பவை, அதற்கு மேலே உள்ள மூன்று படிகள் சத்துவ குணத்தைக் குறிப்பவை. இப்படி வைக்கப்படும் கொலு பிரபஞ்ச சிருஸ்டியின் ஒரு சிறு மாதிரி என்று சொல்லத்தக்க வகையில் அமைந்திருக்கும். இந்த உலகிலுள்ள பொருட்கள் அனைத்துமே சத்வம் - ரஜஸ் - தமஸ் ஆகிய மூன்று குணங்களினால் ஆனவை. அம்பிகையைப் பற்றிச் சொல்லும் போது திரகுணமயீ என்று சொல்வர்.

இந்த மூன்று குணங்களைச் சித்தரிக்கும் வகையில் நவராத்திரி கொலு அமைகின்றது. இதில் மூன்று படிகளில் தமோ குணத்தைக் குறிக்கும் லௌகீக வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள், பொம்மைகள் வைக்கப்படும். இது தமோ குணத்தைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கடுத்த மூன்று படிகளில் அரசன், அரசி, மந்திரி போன்ற பொம்மைகள் வைக்கப்படுகின்றன. இது ரஜோ குணத்தைக் குறிக்கும் மேலேயுள்ள மூன்று படிகளில் தெய்வத் திருவுருவங்கள் வைக்கப்படும். இது சத்துவ குணத்தைக் குறிக்கும். உச்சியில் வைக்கப்பட்ட பூரண கலசம் அம்பிகையின் அருளைக் குறிப்பதாகும். ஒருவன் தமஸ் - ரஜஸ் - சத்வம் ஆகிய முக்குணங்களையும் கடந்து செல்வானாகில் அவன் அன்னையின் அருளுக்குப் பாத்திமாகின்றான் என்பதைக் குறிப்பிடும் வகையில் இந்த நவராத்திரி கொலு அமைகின்றது.

இந்த ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் துர்க்கையும், அடுத்த மூன்று நாட்கள் மகா லக்சுமியையும், அதற்கடுத்த மூன்று நாட்கள் சரஸ்வதியையும் வழிபடுவர். இந்த மூவரும் இணைந்த வடிவம்தான் அன்னை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி.

சுகமாகவும், சுலபமாகவும் வழிபடத் தக்கவள் அம்பிகை. ஆதலால் லலிதா சகஸ்ரநாமம் அவளை "சுகாராத்யா" என்று போற்றுகிறது. பருவமாற்றங்கள் நிகழும் போது நோய்கள் ஏற்படுகின்றன. இந்த வகையில் வசந்தருது, (சித்திரைமாதம்) சரத்ருது (புரட்டாதி மாதம்) ஆகிய பருவக் காலங்களில் முறையே வெப்பத்தினாலும் தட்பத்தினாலும் தோன்றும் நோய்களிலிருந்து மக்களை காப்பாற்றுகிறாள் "சர்வ வியாதிப்ரசமணி" அதாவது அனைத்து நோய்களையும் அடக்கும் மருந்தாக விளங்குகிறாள். அவளைப் "பிணிக்கு மருந்து" என்று அபிராமிப்பட்டர் குறிப்பிடுகிறார்.

நவராத்திரி சமயத்தில் மற்ற எல்லா தெய்வங்களும் பராசக்தியிடம் லயித்து இருப்பதாலும் பராசக்தியை மற்ற தெய்வங்களைவிட ஒன்பது மடங்கு அதிகமாகப் பூஜிக்க வேண்டும் என்பதாலும்தான் நவராத்திரி ஒன்பது நாட்களும் அம்பிகையை வழிபடுகின்றனர்.

நவராத்திரியின் போது ஒவ்வொரு தினமும் ஒரு சக்தி பிரதானமாக அமைந்து மற்ற அம்சங்கள் பரிவாரங்களாகத் திகழ்கின்றன. நவராத்திரியின் முதல்நாள் மகேஸ்வரி பிரதானமாகவும் இரண்டாம் நாள் கௌமாரியும், மூன்றாவது நாள் வராதியும் பிரதானமாக விளங்குகின்றார்கள். நான்காம் நாள் மகாலஷ்மியும், ஐந்தாம் நாள் வைஷ்ணவியும் ஆறாம் நாள் இந்திராணியும் பிரதானமாகத் திகழ்வார்கள். ஏழாம் நாள் பிராஹ்மி, எட்டாம் நாள் நாரசங்கி, ஒன்பதாம் நாள் சாமுண்டி பிரதானமாக விளங்குகின்றார்கள்.

அசுரனை வெல்வதற்காக துர்க்கையாக அவதரித்த அம்பிகை ஒன்பது நாட்கள் நோன்பு இருந்தாள். அதைத்தான் நாம் நவராத்திரியாகக் கொண்டாடுகின்றோம். ஒன்பதாவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் தான் ஆயுதங்களையெல்லாம் பூஜித்தாள். பத்தாவது நாள் அசுரனுடன் போரிட்டு அவனை அழித்தாள். உலகத்துக்கு நன்மை புரிந்தாள். ஒன்பதாவது நாள் ஆயதங்களுக்குப் பூஜை செய்ததால் ஆயுத பூஜை என்றும் பத்தாவது நாள் மகிஜனை வதைத்து ஜெயித்ததால் விஜயதசமி என்றும் கொண்டாடப்படுகிறது.

மகிடாசுரனை அழிக்க வெளிப்பட்ட தாமஸசக்தியை மஹாகாளி அல்லது மஹாதுர்க்கை என்கிறோம். மஹாகாளியை இச்சா சக்தி என்பர். மகிடாசுரனை வதம் செய்ய வெளிப்பட்ட ராஜச சக்தியை லக்ஷமி துர்க்கை என்கிறோம். இது கிரியா சக்தி என்பர். சும்பநிசும்பர்களை அழிக்கத் தோன்றிய சக்தியை ஞானசக்தி என்று சொல்வார்கள். இச்சா சக்தி பார்வதிக்குரியது. கிரியா சக்தி லக்ஷமிக்குரியது. ஞானசக்தி சரஸ்வதிக்குரியதே.

இந்த இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி மூன்றுமே ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் வெளிப்படுகிறது. பார்வதி, மகாலக்ஷமி, சரஸ்வதி ஆகியவர்களின் அம்சங்கள் நம் ஒவ்வொருவருடைய இதயத்திலிருந்தும் வெளிப்பட்டு நம் அன்றாட வாழ்க்கையை நடத்தி வைக்கின்றன. இந்த சக்திகளை வழிபடும் விழாதான் நவராத்திரி விழா.

அம்பிகை நமக்கெல்லாம் தாய். அவளை வழிபடுவதனால் மட்டுமே நம் பிறவித் துன்பங்கள் தீரும். அவளுக்கு ஆடம்பரமான விழாக்கள் தேவையில்லை. உள்ளார்ந்த பக்தி ஒன்று மட்டுமே போதும்.

பூத்தவளே புவனம் பதின்னான்கையும் பூத்தவண்மை காத்தவளே என்று அபிராமிப்பட்டர் வணங்கும் அந்த முழுமுதற் பொருளை மூலாதாரத்தை தேவி பராசக்தியை ஒன்பது நாளும் வழிபட்டு நலம் பெறுவோம்.

**சிந்தனையின் முதிர்ச்சிதான் ஞானம்.**

**தன் துன்பத்தை வெளிக்காட்டாமல் இருப்பவனைவிட தன் மகிழ்ச்சியை வெளிப்படையாகக் காட்டாமல் இருப்பவனே அறிவாளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பிறப்பின் குறிக்கோள்

செல்வி விமலா நடராசா
செயலாளர் ஸ்ரீ சண்முக தர்ம ஸ்தாபனம்

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்பது பெரியோர் வாக்கு. இந்து மத கோட்பாடுகளுக்கமைய வினைகளுக்கு ஏற்ப நாம் பிறவி எடுக்கின்றோம். என்பது எமக்குத் தெளிவாக தெரிகின்றது. மீண்டும் மீண்டும் பிறப்பதற்காகவா நாம் மனிதப் பிறவி எடுத்தோம். இல்லை மீண்டும் பிறவாமலிருப்பதற்குத்தான், மனிதப் பிறப்பு கிடைத்துள்ளது. மனிதப் பிறப்பின் குறிக்கோள் இறைவனை அடைதலே. இப்பிறவியில் தான் சாதனை செய்து இறைவனை அடைய வழியுள்ளது. இப்பேற்பட்ட பிறவி கிடைத்தும் எமது அறியாமையினால் எமக்குள் காமம், கோபம், பேராசை போன்ற தீய குணங்களில் ஈடுபட்டு இப்பிறப்பிலிருந்து மீளமுடியாமல் உள்ளோம்.

நம் புலன்களுக்கு நம் மனதிற்கு நம் உடலுக்கு நாம் அடிமைகள் நமக்கு சுதந்திரமில்லை. மனம் போனபடி வாழ்கின்றோம். அல்லலுறுகின்றோம். நம்மை நாமே உணர்ந்து நம்மை யார் என்று விசாரித்து தன்னுணர்வு, விழிப்புணர்வு பெற்று ஆன்மீக முன்னேற்றம் அடைதலே மனிதனின் குறிக்கோளாகும்.

வாழும் முறையே எமது வழிபாடாகும். எப்போதும் நல்லதையே நினைத்து, நல்லதையே செய்து, நல்லதையே பார்த்து, கேட்டு, நல்லெண்ணங்களோடு நாம் வாழ முயற்சிக்க வேண்டும். அதேபோல் நமக்கு கடமையாக அமைந்த காரியங்களை தர்மம் தவறாது திறமையாகச் செய்ய வேண்டும். செய்யும் கருமங்களில் பலன் எதிர்பாராமல் மனம் முழுவதும் இறைவனிடமே இருக்க வேண்டும். பலன் எதுவாக இருந்தாலும் கவலைப்படக் கூடாது. இன்பத்தையும் துன்பத்தையும் கடவுளின் நன்கொடையாகக் கருதுவது மிக நல்லது. நாம் ஆன்மீக விடுதலை பெறவேண்டுமானால் இந்த இரண்டையும் சமமாக பாவிக்க வேண்டும். இறைவன் சிந்தனையிலேயே சகல காரியங்களைச் செய்வதால் மனதில் பதிவுமில்லை, பாதிப்புமில்லை. தாமரை இலை நீருக்குள் இருந்தாலும் அதில் நீர் ஒட்டுவதில்லை. இது எல்லாமே செய்வதும் ஒன்றும் செய்யாத கர்மயோகியின் நிலையாகும்.

மனிதப்பிறப்பில் உலகியல் ரீதியாக எத்தனையோ இலட்சியங்கள் இருந்தாலும் நிரந்தரமான குறிக்கோளாக இருக்க வேண்டியது இறைவனை அடைதலேயாகும். ஏன் நாம் இறைவனை அடைய வேண்டும்? இறைவன் ஒருவரே சத்யம் இறைவனைத் தவிர மற்றதெல்லாம் அசத்யம் "அசோத்தோமா சத்கமய" அசத்தியத்திலிருந்து சத்தியத்திற்கு இட்டுச் செல்வது இறைவன். ஜீவனின் குறிக்கோள் சத்யத்தையடைவதே. ஆன்மீக சத்யத்தை அடைய ஏனையவற்றை துறக்க வேண்டும். "தமசோமா யோதீர் கமய"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞான இருளிலிருந்து ஞான ஒளிக்குச் செல்லல் "மிருத்யோமா அமர்தங்கமய - இறப்பிலிருந்து இறவாமைக்குச் செல்லுதல். பிறந்து பிறந்து இறக்கும் இந்த அவலவாழ்வில் சாகாமை அமர நிலையடைவதே மனிதனின் குறிக்கோளாகும்.

இறைவனை அடைவது என்பது சாதாரண காரியமல்ல. அதற்கு மிகுந்த பயிற்சியும் வைராக்கியமும் வேண்டும். சகலவற்றை துறக்கும் தியாக உள்ளம் வேண்டும். ஆனால் இது கடைப்பிடிக்க ஆரம்பித்தவுடன் எளிதான மார்க்கமாகிவிடும். இந்த வைராக்கியமும் இருந்தால் எத்தனையோ தடைகளையும் மீறி சாதிக்கலாம். இறைவன் கூடவே இருக்கும் போது என்ன நடந்தால் என்ன? பொறுமையும் சகிப்புத் தன்மையும் கைக்கொள்ள பகவான் விதித்த சந்தர்ப்பங்கள் என்று கொண்டு தடைகளை சோதனைகளை வென்று இறைவன் பாதத்திலேயே எப்போதும் சிந்தனையே நிலை நிறுத்த வேண்டும் அப்போது இங்கேயே இப்போதே பேரானந்தம் அனுபவிக்கலாம். அத்துடன் முக்தி, மோட்சம் அடையலாம்.

ஜீவன், பிறந்து, வளர்ந்து வாழ்ந்து இறக்கிறான். எப்படி பிறந்தோம் என்பது முக்கியமல்ல. எப்படி இறக்கின்றோம் என்பதுதான் முக்கியம் அதைப் பொறுத்துதான் நம் அடுத்த பிறவி அமைகின்றது. நம் ஒவ்வொரு சிறு எண்ணங்களாலும் நம் அடுத்த பிறவி ஏட்டில் பதிவாகின்றது. நம் குணங்கள், இயல்புகள் எல்லாம் அப்படியே பதிவாகின்றது. ஆகவே வாழ்நாள் முழுவதும் பயிற்சி செய்தால்தான் இறக்கும் போது நற்சிந்தனை, இறைவன் நினைவு தோன்றும். பிறவி எடுத்த ஜீவன் இவ்வாறு உணர்ந்து சீவனாகும் போது அவன் பயணம் முடிகிறது. ஒவ்வொரு ஜீவனும் பெறும் விழிப்புணர்வு, சாதனை முயற்சிகளுக்கேற்ப பிரயாணம் விரைவாகவோ, தாமதமாகவோ முடிகிறது. ஆகவே மனிதப் பிறப்பின் குறிக்கோளை நாம் விரைவுபடுத்த வேண்டும்.

நம் வாழ்க்கைக்கு மூன்று தத்துவங்கள் முக்கியம் உடலின் நிலையாமை ஆன்மா பின் அழியாமை மனிதனின் கடமை உடல் நிலையற்றது. ஆன்மா அழியாதது என்ற உறுதிப்பாடு இருந்தால் நமக்கு அமைதி கிட்டிவிடும். கடமைகளை பற்று அற்று பலனின்றி செய்வோமானால் இறைவனை சாத்தியநிலை ஏற்படும். எவருடைய இதயம் தயையுடன் கூடி இருக்கின்றதோ எவருடைய வாக்கு சத்தியத்தினால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றதோ எவரது உடல் பிறர் நலனுக்காக சேவை செய்து இளைக்கின்றதோ அந்த வாழ்க்கையே பரிபூரணமான ஜீவிதம்.

மனிதப்பிறப்பின் குறிக்கோளை அடைவதற்கு விழிப்புணர்வு அவசியமாகும். நாம் வீடு, வாசல், சொத்து, சுகம் எல்லாம் தேடுகின்றோம். ஓடி ஓடி சேர்க்கின்றோம் அதனால் என்ன பயன்? இறைவனை மட்டும் தேடினால் போதும் அவர் வந்து விட்டாரானால் நாம் இந்த உலகில் தேட வேண்டியது இறை அருள் ஒன்று மட்டுமே மற்றவை தேடாமலே வரும். விழிப்புணர்வோடு கூடிய சாதனை செய்து இறையருள் பெற்று அருள் ஒளியுடன் இணைந்து மீண்டும் பிறவாத நிலையை அடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானமும் யோகாசனமும்

திருமதி சந்திரா பாலசுப்பிரமணியம்
அதிபர்
ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

இன்றைய உலகம் மிகவும் பரபரப்பானது. எண்ணற்கரிய செயற்பாடுகளை உள்வாங்கி மிக வேகமான இயக்கத்தைக் கொண்டது. இந்தச் சிக்கலான வலைப்பின்னலிலே அகப்பட்டுக் கொண்ட மனிதன் தனக்குக் கிடைத்த ஏதோ ஓர் ஆதாரத்தைப் பிடித்துக்கொண்டு வாழ்க்கையின் முன்னேற்றத்தைக் காணும் முயற்சியிலே திணறித் திண்டாடிக் கொண்டிருக்கின்றான்.

அரசியல் நெருக்கடிகள், அறிவியல் நெருக்கடிகள், பொருண்மிய நெருக்கடிகள் என்பவற்றின் மத்தியிலே போட்டியும், பொறாமையும், பேராசையும் கீழ் நிலைச் சிந்தனைகளும் தோன்றி மனித மனங்களை உருக்குலைந்துள்ளன. இதனால் உள்ளமும், உடலும் ஓய்வென்பதை அறியாது தளர்ந்து போயுள்ளன. பணியக, இல்ல வேலைப் பளுக்களிலிருந்து தற்காலிக ஓய்வெடுப்பதற்காக சில நாட்கள் விடுமுறை பெற்று வேறிடங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கும் பலரை நாம் பார்க்கின்றோம். ஆனால் இது தற்காலிக ஓய்வுதான். மீண்டும் பழைய இடங்களுக்கு வந்து அதே வேலைகளைச் செய்யத் தொடங்குகிறார்கள். மீண்டும் பிரச்சினைகளும் தொல்லைகளும்தான். அதே போல் மன அமைதியும் மீண்டும் அரிதாகி விடுகின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலே இதற்கான ஒரு நிரந்தரத் தீர்வுதான் என்ன? என்று நாம் சிந்திக்கும் போது கிடைக்கும் ஒரே பதில் - "தியானம்" என்பதுதான் அனைத்து ஆன்மீகச் சிந்தனைகளின் ஆரம்பமும் அதுதான் அனைத்து உலக செயற்பாடு களிலிருந்தும் மெல்ல மெல்லத் தொடர்பை விடுவித்து ஒருநிலைப்பட்ட மனத்தின் மூலம் அடையும் ஆனந்தமே இத் தியானமாகும்.

இதன் தொடர்ச்சியான பயிற்சியும், அனுபவமும் நாம் நினைத்த உடனேயே மனத்தை ஒரு நிலைப்படுத்தும் நாம் ஆற்றும் எந்தச் செயற்பாட்டிலும் நம்மை ஈடுபட வைப்பதோடு அதில் பற்று இல்லாத அதாவது, தொடர்பெதுவும் இல்லாத நிலையையும் ஏற்படுத்தும். தாமரை இலையில் உள்ள தண்ணீரின் நிலை போன்றதே அது. இதுதான் இன்றைய சூழ்நிலையிலே ஒரு நிரந்தரத்தீர்வாக அமையும். பகவத் கீதை கூறும் பாடமும் இதுதான். பண்டைய ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் அனைவரினதும் அனுபவங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான். தியானத்தை பயிலும் போது மெல்ல மெல்ல பௌதிகத் தொடர்புகள் அறறுப்போய இறுதியில் மனத்தின் பல்வகைப்பட்ட எண்ணங்கள் எல்லாம் படிப்படியாக மறைந்து மாறாத ஒருமித்த மனநிலை இறுதியில் கிடைக்கப்பெறும். இந்தச் சிறப்பான நிலை மிகக் குறுகிய நேரத்துக்கு மாத்திரமே ஆரம்ப காலத்தில் நிலைத்துப் பின்னர் பல மணிநேரம் நீடிக்கத் தொடங்கும். இத்தகைய தியானப் பயிற்சி உடையோர் சிறந்த ஞாபகங்கள் கொண்டவர்களாகவும், பெரும் சாதனையாளர்களாகவும் திகழ்வர்.

மனத்தை வழிப்படுத்தத் தியானம் எவ்வாறு அவசியமாகின்றதோ அவ்வாறே எமது உடலை வழிப்படுத்த யோகப்பயிற்சிகள் பயன்படுகின்றன.

பஞ்சபூதங்களின் ஒருமைப்பாட்டினால் உருவாகிய எமது உடல், சுவாச, குருதி, சமிபாட்டு, தசை, என்புத் தொகுதிகளின் செயற்பாடுகளினால் இயங்குகின்றது. யோகாசனங்கள் இச் செயற்பாடுகளை மிகச் சீராக நடைபெறச் செய்கின்றன. மனத்தினைச் சீர்செய்யும் தியானமும் உடலினைச் சீர் செய்யும் யோகாசனமும் இணைந்து நோயற்ற சிறப்பான வாழ்க்கைக்கு வழிவகுக்கின்றன. மாறுபட்ட எண்ண ஓட்டங்களும் வேறுபட்ட உடற் செயற்பாடுகளும் மன அழுத்தச் சிக்கல்களும் குருதி அமுக்கம் போன்ற உடல் நோய்களுக்கு காரணங்களாகின்றன. இதுபோன்ற பல நோய்களை ஊக்குவிக்கின்றன.

யோகாசனப் பயிற்சிகள் இத்தகைய நோய்களைக் கட்டுப்படுத்துவதில் பெரும் பங்காற்றுகின்றன. சிரசாசனம் மூளைக் குருதியோட்டத்தைச் சீர் செய்வது போன்று குக்குடாசனம் உடலின் அனைத்து நரம்பு, தசையிழையங்களையும் முறையாகச் செயற்படவைக்கின்றது. யோகாசனங்கள் அனைத்தும் அறிந்தவர்களின் வழி காட்டலிலேயே ஆரம்பத்தில் செய்யப்பட வேண்டும்

உள்ளத்தையும் உடலையும் ஒழுங்கமைத்து ஆன்மீகத்தையும், ஆளுமையையும் விருத்தி செய்யும் தியான யோகாசனப் பயிற்சிகளை இளம் பராயத்திலிருந்தே பழக வேண்டும். இதனை ஊக்குவிப்பதில் பெற்றோரும் ஆசிரியர்களும் பெரும் பங்கினை ஆற்ற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வர வரலாறு

**திருமதி சுலோசனா ஜெயபாலன்**
பிரதி அதிபர்
ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

ஈழநாட்டில் பாடல்பெற்ற சிவத்தலங்களுள் ஒன்றாக விளங்குவது திருக்கோணேஸ்வரமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமைப்பெற்று உலகின் பலபாகங்களிலும் வாழ்ந்துவரும் இந்துக்களின் வழிபாட்டுக்குரிய புனிதத்தலமாக திருக்கோணேஸ்வரம் இன்று இருந்து வருகின்றது. கோணேசர் கல்வெட்டு, தக்ஷிண கைலாச புராணம், திருக்கோணாசல புராணம் முதலியன திருக்கோணேஸ்வரம் பற்றிய வரலாற்றம்சங்களை எடுத்துக் கூறுவனவாக உள்ளன. இதில் கவிராசர் என்ற புலவர் எழுதிய "கோணேசர் கல்வெட்டு" என்பதே மிக முக்கியமானதாகும். தக்ஷிண கைலாசபுராணம் கோணேசர் கோயில் பற்றிய மிகப்பழைய தலபுராணமாகும். இந்நூல் பதினான்காம் நூற்றாண்டின் ஆரியச் சக்கரவர்த்தியான செகராசசேகரனாற் பாடப்பெற்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட திருக்கோணேசலப்புராணம் முன்னையவைகளைவிட விரிவான முறையில் எழுதப்பட்டதொன்றாகும்.

திருக்கோணேஸ்வரம் தக்ஷிணகைலாசம், மச்சகேஸ்வரம் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. முன்னொரு காலத்திலே ஆதிசேடனும், வாயுபகவானும் தான்தான் பெரியவன் என்ற மமதை ஏற்பட்டுத் தத்தமது வலிமையைக் காட்ட முயன்ற வேளையிலே மகாமேருமலையின் சிகரங்களை ஆதிசேடன் தனது முகத்தால் மறைக்க, வாயுபகவான் சீற்றம் கொண்டு மகாமேருமலையின் சிகரங்களில் மூன்றைப் பெயர்த்து கடலில் வீசிவிட அவைகளில் ஒன்று இலங்கையில் வீழ்ந்து திருகோணமலையாக அமைந்தது என்பது புராணக்கதை.

கோணேசர் கோயில் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்புக்களை உடைய ஒரு சிவ தலமாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இராவணன் இலங்கையை ஆண்டதாக இராமயணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. சிவபக்தனாக விளங்கிய இராவணன் தள்ளாதவயதிலுள்ள தனது தாயாரின் வழிபாட்டிற்காகத் தென்கைலையை வெட்டிப்பிளந்தான் என்று புராண இதிகாசங்களிலும் தேவாரங்களிலும் கூறப்படுகின்றன. கோயிலுக்குப் பக்கத்தே உள்ள "இராவணன் வெட்டு" என்ற மலைப்பிளவு இதற்குச் சான்றுபகர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் கிழக்குக்கரையிலுள்ள பகுதியோடு ஏற்பட்டிருந்த வாணிபத் தொடர்பின் காரணமாக திருகோணமலை இந்துசமுதாயமும் இந்துக் கோயில்களும் வளர்ச்சி பெற்றன எனக் கருதலாம். மகாசேன மன்னனுடைய காலத்திலே கோகர்ணத்திலும், கிழக்குக் கரையிலுள்ள வேறுசில இடங்களிலும் உள்ள தேவாலயங்களை அழித்து விகாரைகளை அரசன் கட்டுவித்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது. எனவே மகாசேனனுடைய ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கிழக்குப்பகுதியிலே திருக்கோண மலையிலும் வேறுசில இடங்களிலும் சைவாலயங்கள் நிலை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இந்தியாவிலே குப்தராட்சிக் காலத்தில் எழுந்த புராணங்களில் வாயுபுராணம் ஒன்றாகும். இந்நூலில் மலயதீவு என்ற நாட்டின் கிழக்குக் கரையிலுள்ள கோகர்ண என்ற சிவனுடைய பெயரைக் கொண்ட சிவத்தலத்தைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. வாயுபுராணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள மலாயதீவு பலவகையான மணிகளும், இரத்தினங்களும், பொன்னும் கடல் படுதிரவியங்களும் கிடைக்கின்ற நாடு. அங்கே அகஸ்திய பவனமும், திரிகூட நிலையமும் அமைந்திருக்கின்றன என்று குறிப்பிடப்படுகின்றது. இவ்விபரங்களெல்லாம் இலங்கையைப் பற்றிய மரபு வழியான வர்ணனைகளைப் பெரிதும் ஒத்துள்ளதால் வாயுபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவாலயம் இலங்கையிலுள்ள கோணேஸ்வரமே என்று கூறக்கூடியதாக உள்ளது.

புராதன காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த கோணேஸ்வரத்தின் மீது ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்த நாயனார் தேவாரம் பாடியமை முக்கியமான நிகழ்வாகும். கோணமலைதனிலே கோணேஸ்வரம் அமைந்திருந்ததன் காரணமாக "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே" என்று நாயனார் அழகாகப் பாடியுள்ளார். திருகோணமலையின் சிறப்பு அதன் எழில் என்பன இத்தேவாரங்களில் பிரதிபலிக்கின்றன. தேவாரகாலத்துக் கோணேஸ்வரம் காவும் பொழிலும் சூழப்பெற்றிருந்தது. அங்கு கனிமரச் சோலைகளின்றி நிழல்தரு மரச்சோலைகளும் பூம்பொழில்களுமே காணப்பட்டன. மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, வண்செருந்தி, செண்பகம், குருந்து, முல்லை முதலியன வளர்ந்திருந்ததாகத் தேவாரங்களில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் சோழராட்சிக்காலத்தில் மனுநீதிகண்ட சோழனின் பரம்பரையில் வந்த குளக்கோட்டு மன்னன் சோழ நாட்டிலிருந்து திருகோணமலைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தான் என்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. குளக்கோட்டனின் திருப்பணிகளே கோணேசர் கல்வெட்டிற்குக் கருவாய் அமைந்தன. குளக்கோட்டனைப்பற்றிய கதைகள் தக்ஷிண கைலாசபுராணம், திருகோணாசல புராணம் போன்ற தல புராணங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ளது. திருகோணமலைத் தமிழர்களின் வரலாற்றம்சங்கள் குளக்கோட்டன் கதைத் தொகுதியில் செறிந்துள்ளன. குளக்கோட்டன் கோணேச கோயிலைப் புனரமைத்துக் கோபுரங்களைக் கட்டியமை, கோயிற் சேவைகளுக்கென தென் இந்தியாவிலிருந்து பெருந்தொகையானோரை வரவழைத்து அவர்களைக் குடிகளாக்கி ஆலயத்தொழும்புகளை வகுத்தமை, தகைமை வாய்ந்த தலைவர்களுக்கு வன்னியம் என்ற பட்டத்தைக் கொடுத்து சமுதாயத்தைப் . பரிபாலிக்குமாறு சிற்றரசுகளை உறுதிப்படுத்தியமை ஆகியன குளக்கோட்டன் கதையின் பிரதான அம்சங்களாகும். இன்று இப்பகுதியிலுள்ள சில ஊர்களின் காரணப் பெயர்கள் அதற்குச் . சான்று பகர்வதாக உள்ளது. திருகோணமலை நகருக்குத் தெற்கே காணப்படும் மூதூரில் மல்லிகைத்தீவு, சந்தனவெட்டு, கட்டைபறிச்சான் என்பனவும் திருகோணமலை நகருக்கு வடக்கே உள்ள திரியாய் என்ற இடமும் காரணப் பெயர்களே. மல்லிகைத்தீவு என்னும் இடத்திலிருந்து மல்லிகைப் பூக்கள் கோயில் பூசைக்காகக் கொண்டுவரப்பட்டன என்பதும், சந்தன வெட்டு என்னும் இடத்தில் சந்தனமரங்கள் வெட்டப்பட்டு கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் பறிக்கப்பட்டடு கொட்டியாரக்குடா ஊடாகக் கோணேசர் கோயிலுக்குக் கொண்டுவரப்பட்டன என்பதும், திரியாய் என்னுமிடத்திலிருந்து விளக்குத்திரிகள் கொண்டுவரப்பட்டன என்பதும் கர்ணபரம்பரைக் கதைகளாகும். குளக்கோட்டு மன்னன் திருக்கோணேஸ்வர ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளான் என்பதை கோட்டை வாசலில் உள்ள கற்றூணில் எழுதப்பட்டுள்ள "முன்னே குளக்கோட்டன் மூட்டுந்திருப்பணியை" என்ற பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கஜபாகு என்ற பெயரைக் கொண்ட அரசன் ஒருவன் கோணேஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்பினைப்பற்றியும் கோணேசர் கல்வெட்டு எடுத்துக் கூறுகின்றது. இம்மன்னன் கோணேச கோயிலைத் தரிசித்து வழிபட்டமை, பொன்னும் பொருளும் ஆபரணங்களும் கோயிலுக்குக் கொடுத்தமை, நிலங்களைத் திருத்தி அவற்றைக் கோயிலுக்குத் தானம் பண்ணியமை போன்ற விடயங்கள் விரிந்துரைக்கப்பட்டுள்ளன.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையிலே பாண்டியப் படையெடுப்புக்கள் நிகழ்ந்தன. இப்படையெடுப்பில் வீரபாண்டியன் என்பவர் வெற்றிபெற்று கோணமலையிலும் திரிகூடகிரியிலும் தங்களது இலச்சினையாகிய இணைக்கயல்களின் உருவத்தைப் பொறித்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். திருகோணமலைக் கோட்டையின் முன்புறத்தில் உள்ளதும் குளக்கோட்டன் கல்வெட்டு பொறிக்கப் பட்டதுமான தூணில் காணப்படும் கயலின் உருவம் வீரபாண்டியனாலேயே பொறிக்கப் பட்டிருத்தல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செகராசசேகரன். பரராசசேகரன் என்ற பட்டங்களைக் கொண்ட அரசர் திருக்கோணேஸ்வர ஆலயத்தைத் தரிசனம் பண்ணத் திருப்பணிகளைப் புரிந்தனர் என்பது வரலாற்று அடிப்படையில் ஒப்புக் கொள்ளக் கூடியதொன்றாகும். பதினைந்தாம் நூற்றாண்டிலே கோணேஸ்வரத்தில் ஆறு கோபுரங்கள் இருந்தனவென்று அருணகிரிநாதர் பாடலிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே திருக்கோணேஸ்வரம் மிக உன்னத நிலையிலே காணப்பட்டது. சிறப்புவாய்ந்த இந்த கோணேசகோயிலை கி.பி 1624ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இடித்தழித்து அந்தக் கற்கோயிலில் இருந்த கற்களால் "பிறட்டரிக் கோட்டை"யைக் கட்டியிருக்கின்றார்கள். கோட்டைச் சுவரைப்பிரித்து ஆராய்ந்தால் கோணேசகோயில் வரலாற்றுச் சின்னங்கள் எமக்குக் கிடைக்கும். போர்த்துக்கேயர் கோணேசகோயிலை இடித்தழித்த காலத்தில் ஆலயத்தில் இருந்த அடியார்கள் ஆலய விக்கிரகங்களை அன்னியருடைய கையிலகப்படாமல் எடுத்துச் சென்று கிணறுகளிலும் குளங்களிலும் புதைத்து மறைத்து வைத்திருந்தார்கள் அவற்றில் பல விக்கிரகங்கள் 1950 ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டன. அதன் பின்னர் தற்போதிருக்கும் ஆலயம் கட்டப்பட்டு இம்மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பெற்று 1963இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1981ஆம் ஆண்டில் மேலும் பல திருப்பணிகள் செய்யப்பட்டு புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. கோணேசப்பெருமானின் திருவருள் காரணமாக இந்துக்கள் அனைவராலும் சிறப்பாகத் திருகோணமலைவாழ் மக்களாலும் தரிசிக்கக்கூடிய பாக்கியம் பெற்றுள்ளோம். எனினும் இந்துக்களின் புனித பிரதேசமாக இப்பிரதேசம் மாற்றப்பட்டு பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பெற்றிருந்த உன்னத நிலை ஒன்று ஏற்படாதா? என்ற ஏக்கப்பெருமூச்சும் இந்துக்களிடையே இல்லாமலில்லை. இந்நிலை ஏற்படுவதற்கு எல்லாம்வல்ல கோணேசப் பெருமான் அருள்புரிவாராக.

**உண்மையை அறிவது ஞானம்.**
**உண்மையை நம்புவது பக்தி,**
**உண்மையாக நடப்பது சன்மார்க்கம்.**

**தன் காலில் நிற்க எது உதவுமோ அதுவே கல்வி**

**சிந்தனையின் முதிர்ச்சிதான் ஞானம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HINDUSIM - A BRIEF SKETCH

## An Extract from
## Swami Vivekananda's Address
### In Chigaco

Extracted by
M. Balasingham.
Sri Shanmuga Hindu Ladies' College
Trincomalee

Three religions which have come down to us from prehistoric times now stand in the world. They are Hinduism, Zoroastrianism & Judaism. Though they have all received shocks throughout the ages, their inner strength is proved by their survival till now. But while Judaism failed to absorb Christianity and was driven out of its place of birth and only a handful of parsees is all that remains of Zoroastrianism, various sects formed in India & seemed to shake the religion of the Vedas to its very foundations, these sects were all absorbed and assimilated into the large body of the mother faith, Hinduism.

From the high spiritual flights of Vedanta philosophy of which the latest science discoveries seem like echoes, to the low ideas of idolatry, to the agnosticism of the Buddhists and the atheism of the Jains, each has a place in Hinduism.

The question then arises, "Where is the common basis upon which all these seemingly hopeless contradictions rest. I shall attempt to answer this question.

THERE NEVER WAS A TIME WITHOUT CREATION

THE Hindus have received their religion through REVELATION, the Vedas. They hold that the Vedas are without beginning or end. A book without beginning or end may sound laughable to this audience. Vedas do not mean a book.They are the collected treasury of spiritual laws discovered by different persons at different times. Just as the Law of Gravity existed before its discovery and will continue to exist even if all humanity forgot it, so it is with the laws that govern the spiritual world. The moral and spiritual relations between soul and soul and between individual spirits and the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

father of all spirits were there before their discovery and would remain even if we all forget them.

These laws were discoverer by Rishis and we honour them as perfect beings. Some of these great Rishis were women. It may be said that these laws may be without end, but they must have had a beginning. The Vedas teach us that creation is without beginning and end. Science has proved that the sum total of cosmic energy is always the same. Then, if there was a time when nothing existed, where was this energy? Some say it was in the form of God. This would make god mutable only compound is multable and must undergo change which leads to destruction. This means God would die. This is absurd. Hence, there never was a time when there was no creation.

A simile may make understanding easier. Creation and Creator are two parallel lines without beginning and end. God is the ever active providence. By his power, systems after systems are evolved from chaos, made to run for a time and destroyed. The Brahmin boy's daily chant, "The sun & the moon, the lord created like the suns and moons of previous cycles" agrees with modern science.

I AM THE SPIRIT LIVING IN A BODY. I AM NOT THE BODY. THE BODY WILL DIE, BUT I SHALL NOT DIE.

If I shut my eyes and conceive my existence, the idea before me is a body. Am I then just a body. The Vedas declare, "No, I am a spirit living in a body. The body will die, but not me. The body shall fall but I shall live on. I had a past also. The soul was not created for creation is a combination which has a certain future dissolution.

Consider. Some are born intelligent, healthy, with a perfect body and all things they will need in life. Others are born with the opposite qualities, even with physical handicaps. If they are all created, will a just and merciful God create people with such difference. Even if it is argued that people miserable in this life will be happy in the future life, the idea of a God creator does not explain this anomaly, but simply expresses the cruel decree of an all powerful being. A person born miserable must have given cause before his birth to deserve such a birth.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE NATURAL HABITS OF A NEW BORN: SINCE THEY WERE NOT OBTAINED IN THE PRESENT LIFE, THEY MUST HAVE COME DOWN FROM PAST LIVES.

Bodies acquire certain tendencies from heredity. These tendencies only mean the physical outward form through which a singular strange mind acts in a peculiar way. There are tendencies peculiar to a soul caused by its past actions. Such a soul would take birth in a body and display its tendency through that body. This is in agreement with science which explains everything by habit got though repetitions. As repetitions are not obtained in the present life of a new born, they must have come down from past lives.

If this is so, how is it that I do not remember of my past life? This can be easily explained. Consciousness is only the surface of the mental ocean, and past experiences are stored in its depths. Try hard and they will come up. Verification is the perfect proof of a theory and here is the challenge of the Rishis. Try and you would get a complete memory of your past life.

The Hindu believes he is a spirit. The sword cannot pierce him or the fire burn him. To him, every soul is a circle without a circumference, whose centre is located in the body and death means the change of the centre from body to body. The soul is not bound by conditions of matter. In its very essence it is free, unbounded, holy and perfect. But somehow it finds itself tied to matter, and thinks of itself as matter.

Why should a holy and free soul be under the bondage of matter? We are told that Hindus say no such question can be there. The question exists and the Hindu is brave enough to answer the question. My answer is, "I do not know how the perfect being, the soul, came to think of itself as imperfect, joined and conditioned by matter." It is a fact that one thinks of himself as a 'body'. The Hindu does not attempt to explain why this is so. 'It is the will of God' is no explanation. This is equal to what the Hindu says, "I do not know".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We hold that the soul is eternal. immortal and perfect and death means only a change of centre from body to body. The present is determined by our past actions and the future by the present. The heart sinks at the suffering experienced in this world, yet this is the law of nature. Is there no hope? Is there no escape ? go out the cry from the bottom of the hearts of sorrow. It reached the throne of mercy. Words of hope and consolation came down and inspired a Vedic sage. He stood up before the world and proclaimed the glad tidings. "Hear ye, children of moral bliss. Even you who reside in higher spheres! I have found the ancient one who is beyond all darkness, all deception. Knowing him alone you shall be saved from death over again."

The Vedas proclaim not a combination of dreadful, unforgiving laws, not an endless prison of cause and effect. At the head of all these laws stands One, "by whose command the wind blows, the fire burns, the clouds rain, and death stalks upon the earth." And what is the nature of this 'One'?

He is everywhere, the pure and formless one, the Almighty and the all merciful. "Thou art our father, Thou art our mother, Thou art our beloved friend, Thou art the source of all strength, give us strength. Thou art He who beareth the burdens of the universe; help me bear the little burden of my life". Thus sang the Rishi of the Vedas. And how should we worship Him? Through love. "He is to be worshiped as the one beloved, dearer than everything in this and the next life."

This is the doctrine of love declared in the Vedas. This was fully developed and taught by Krishna, whom the Hindus believe is God born as man on earth. He taught that a man should live like a lotus leaf which is always in water but never gets wet. Thus, a man should live on earth, his heart to God and his hands to work. It is good to love God for rewards but better to love Him for love's sake. Hence this prayer,

"Lord, I do not want wealth, children or learning. If it is thy will, I shall go from birth to birth, but grant that I may love thee without the hope of reward – love unselfishly for love's sake."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

King Yudhishthira, Krishna's disciple, was driven from his kingdom by his enemies and lived in the Himalayas. One day the queen asked him why such a virtuous man like him suffers so much. The king replied, "My Queen, behold how beautiful the Himalayas are. They do not give me anything, but my nature is to love the grand and the beautiful. Similarly, I love the lord. He is the source of all beauty. He is the only thing to be loved. Therefore, I love Him but ask for nothing. Let Him place me anywhere he likes. I must love Him for love's sake. I cannot trade my love for favours."

PURITY IS THE CONDITION OF HIS MERCY

The Vedas teach that the soul is divine, only held in bondage by matter. Perfection will be reached when this bondage ends and MUKTI and freedom from misery, death & imperfection will fellow. This will come only through the mercy of God, and this mercy comes on the pure. The pure of mind see God even in this life. This is the vital concept of Hinduism. The best proof a Hindu sage gives about the soul and about God is: "I have seen the soul, I have seen God." The whole object of the Hindu System is to become perfect, divine to reach God and to see Him. This becoming perfect even as the Father in heaven constitutes the Hindu religion.

What becomes of a man when he attains perfection? He enjoys unlimited and perfect bliss and enjoys this bliss with God. Up to this point all Hindus are agreed. This is the common religion of all the Hindu sects.

If it is happiness to enjoy the consciousness of this small body, it must be greater happiness to enjoy the consciousness of many Bodies. The ultimate happiness will be reached when it becomes a universal consciousness. To gain this infinite universal individuality, this prison individuality must go. Then alone will death cease, then alone can misery end. Science has proved the physical individuality is a deception, that a body is one little continuously that changing body in an unbroken ocean of matter and ADVAITA (unity) with other souls is the necessary conclusion.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Science is nothing but the finding of unity. As soon as science reaches perfect unity it would stop from further progress, because it would have reached its goal. Thus, chemistry would not progress further when it would discover one element out of which all others could be made. Physics would stop its services after discovering one energy of which all the others are various shapes. The science of religion would become perfect when it would discover Him who is the one life in a universe of death, Him who is the constant basis of an ever changing world.

All science is bound to come to its conclusion in the long run. Manifestation, not creation, is the function today and the Hindu is glad that what he has been entertaining in his mind for ages is going to be taught in more forceful language and with further explanations from the latest conclusions of science.

## *Who is a Hindu*

*A Hindu is one that believes in one God who incarnates,*

*as and when He deems necessary, in the shape and form He wishes.*

*God has incarnated in many forms as Lord Rama , Lord Shiva , Lord Brahma*

*( in His form as The Creator)*

*Lord Krishna and others who were in existence for shorter periods.*

*Certain incarnations of God have come under criticism*

*from those who have the inbuilt mind concept that*

*God should only be in a certain form. This is totally refuted by Hinduism.*

*Our belief is that God has the infinite capacity to*

*take various forms as and when He so feels.*

*A simple little human being has no right to put limitations on God.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்
## சில சிந்தனைகள்

செல்வி.கலாதேவி கைலாயபிள்ளை
ஆசிரியர்
ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை.

### பன்னிரு திருமுறைகள்

தமிழ் பண்பாட்டுக்கு தமிழர் வழங்கியுள்ள மிக முக்கியமான பங்களிப்பு பத்தி இலக்கியமாகும். கடவுளுக்கும் வழிபடுபவனுக்குமுள்ள உறவினை ஆள் நிலைப்படுத்தி ஆளுக்கு ஆள் உறவினை ஏற்படுத்திக் கொள்வது போல ஓர் உறவினை ஏற்படுத்த உறவின் உணர்வு நிலையில் எழுந்தவைதான் கவிதைச் செழுமை மிக்க பக்தி இலக்கியங்கள். இவற்றை இன்பத் தமிழால் நிலைபெற விளங்கி நீங்காத்துணை நிற்கும் திருவருள் நூல்களே பன்னிரு திருமுறைகளாகும்.

### திருவாசகம்

தம்மை அமைச்சரெனக் கூறிய உலகோர் அடியார் எனப் போற்றுமாறு சிவக் கோலத்தினராய்த் திகழ சிவபிரான் மேல் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கியவராய் செந்தமிழ் மாமறை முடிபாய்த் திகழும் திருவாசகத் தேனை திருவருளால் "நமச்சிவாய" எனத் தொடங்கிப்பாட அதன் அருமை உணர்ந்து, நுகர்ந்து இன்பச் சீர்மையினை உலகுக் குணர்த்த சிவபெருமான் அடிகளுக்கு "மணிவாசகம்" எனப் பெயர் கூறினார். 'திரு' என்பது ஈண்டுப்பிறவி அல்லலை அறுத்து எய்தப் பெறுவதாகிய வீடு வாசகமாவது மணிவாசகம். அதாவது திருவைந்தெழுத்து. எனவே திருவாசகம் திருவைந் தெழுத்தின் விளக்கமாக அமைகிறது. திருவாசகத்தின் முதலாக அமைந்திருப்பதும் சிவபுராணமே.

### சிவபுராணம்

சிவபுராணம் குறிப்பாக ஈழத்துச் சைவர்களிடம் மிகப் பிரபல்யமான பாமாலையாயுள்ளது. இது பாடசாலைகள், பொது இடங்கள், திருமண வீடு போன்றவற்றிலெல்லாம் பாடப்பட்டு வருகிறது. பலருக்கு மனனமாகவே உள்ளதும் குறிப்பிடத்தக்கது. இப்புராணம் பற்றிய சில கருத்துக்களை இங்கு எடுத்து நோக்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. தொல்லையிரும் பிறவி

சிவமணம் கமிழும் சிவபுராணத்தின் ஆரம்பத்தில் தொல்லை இரும் பிறவி என அடி எடுத்துத் தொடங்குகிறோம். இவ்வெண்பாவினால் நெடுங்காலம் நமக்குத் தொல்லை தரும் உடல் நோயைத் தீர்க்க மருந்து மூலிகைகள் போல மணிவாசக அடிகளார் திருவாசகத்தேன் கொண்டு உயிர் நோயை நீக்கி ஆனந்தத்தை ஆக்கியது என அதனால் வரும் பேறு உணர்த்தப்படுகின்றது.

(அ) இது ஒரு பிறபட்ட கால வழக்கமாகும். எண்ணிறைந்த திருவாசகப் புகழ்பாக்களில் தொல்லையிரும் பிறவியும் ஒன்றாகும். இது திருவாசகம் பாடப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பின்னர் பாடிய பாவாகவே தெரிகிறது. அத்துடன் இப்புகழ்ப்பா பாடப்பட்டவுடன் அல்லாது பல காலத்தின் பின்னரே திருவாசகம் பாடும் முன் பாடப்படும் புது வழக்கம் அமைந்ததாகத் தெரிகிறது. அதாவது மணிவாசகர் சிவபுராணமெனும் பாமாலையைப் புனைந்த போது அல்லாது இடைக் காலத்தில் ஏற்பட்ட ஒன்றாகவே உள்ளது.

(ஆ) வாசகத்துக்காய் தனித்துவமான தொன்றல்ல :

இது திருவாசகத்துக்கென்றே விசேடமானது. சிவபுராணத்துக்காய் தனித்துவ மானதல்ல முடிவில் திருவாசகம் என்னும் தேன் என முடிவுரையானதால் வாசகம் முழுவதுக்கும் பொதுவானதாகிறது. அத்துடன் அண்மைக் காலத்தில் நுட்பமான சமயத்தை சமுதாயம் பின் தொடர்வதால் வாசகத்துக்குத் தனிச் சிறப்புக் காணப்படுகின்றது. தொல்லையிரும் பிறவி மட்டுமல்ல அதைத் தொடர்ந்து ஆறு வெண்பாக்கள் உண்டு. அவைகளையும் படிக்க வேண்டும் எனவே தொல்லையிரும் பிறவி எனத் தொடங்கும் வெண்பா மட்டுமே சிவபுராணத்துக்காய் தனித்துவ மானதல்ல.

(இ) திருமுறைப்பா ஓதல்

திருமுறைப்பாக்களைப் பாடும்போது வேறு பாக்கள் பாடக் கூடாது. எனத் திருமுறைகளின் அடங்கன் முறையை முதன் முதலில் பதித்த யாழ்ப்பாணம் சுவாமிநாதத் தம்பிரான் என்பார் தமது திருமுறை ஒதும் முறை என்ற முன்னுரைக்கும் பகுதியில் தெரிவித்து இருக்கிறார். எனவே, சிவபுராணம் திருமுறை ஓதலில் வேறு பாக்களைப் பாடக் கூடாது என்பதாகிறது.

(ஈ) நிலையான மந்திரம்

திருச்சிற்றம்பலம் என்பது நல்ல தொடக்கமே சிற்றம்பலம் என்பது அறிவு வெளி ஒளி மயக்கத்தை நீக்கி ஞானவெளிக்கு உள்ளிடும் ஆயத்தத்தை அடைகிறான். எனவே சிவபுராணம் ஒரு பூரண வடிவான மந்திரமாகவுள்ளது. நமச்சிவாய என்பது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களகரமான தொடக்கமாகவும் பாட்டின் இறுதியில் பயனைச் சொல்லிய முடிவும் உள்ளது. எனவே முதலும் முடிவும் கொண்ட முழு நிறைவான தமிழ் மந்திரத்திற்கு தொல்லை இரும் பிறவி அவசியமில்லை என்பதே கருத்தாகிறது.

சொல்லிய பாட்டின் பொருள்

சிவபுராணம் முடிக்கப்படும்போது கூறப்படுகின்ற சொல்லிய பாட்டின் பொருள் யாது?

(அ) பொதுப்பொருள்.

இங்குள்ள சொற்களை கிளிப்பிள்ளை போலச் சொல்லாது பொருளுணர்ந்து சொல்லுதல் என்று பொருள்படலாம். அதாவது சொல் எட்டும் உணர்வை உணர்ந்து சொல்லல் எனப் பொருள் கொள்ளலாம். எனினும் இதைவிட மேலான பொருள் ஒன்றைப் பெரியோர் சொல்லுவர்

(ஆ) சிறப்புப் பொருள்

சொல்லிய பாட்டின் பொருள் சிவமே அதாவது பாட்டைச் சொல்லும் போது வரிகளினூடு சிவத்தை உணர்ந்து சொல்லுதல் வாசகம் முழுவதுக்கும் பொருள் கேட்ட போது சிற்றம்பலத்தை வாசகர் காட்டினார். ஆகவே சொல்லிய பாட்டின் பொருள் என்பது ஞானப் பெருவெளியாம் சிற்றம்பலமே என அமையலாம்

**பிறவி அறுக்கும் மந்திரம்**

"செத்துக்கிடக்கும் பிணத்தருகே இனிச் சாம்பிணங்கள் கத்துங் கணக்கென்ன" என யாக்கை நிலையாமை பற்றிப் பட்டினத்தார் கூறுகிறார். அனுபவங்கள் சேகரிக்கப்பட்ட ஆனந்த மார்க்கமே அவர் கண்ணுக்குத் தெரிந்தது இங்கும் நிலையாமையிலிருந்து அகரவுயிர் போல் அறிவாகி எங்கும் நிகரிலிறை நிற்கும் நிறைந்து என உமாபதி சிவாச்சாரியார் போற்றும் இறைவனின் நிலைத்த தன்மை தெரிகிறது. இங்கு காணும் வரிகள்

"பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க......."

"மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி............"

"பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்.........."

"பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே............"

"அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று.............."

இது பாமாலையிடையே வரும் பிறப்பறுக்கும் மலரிதழ்கள் எனவே இது ஒரு பிறவிப்பிணி அறுத்து சிவனடிக்கீழ் வைக்கும் உயர்வான மந்திரம் பிறவிப்பயன். பிறவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுப்பதே என்பதை இலக்காகக் கொண்டு வாழும் உத்தமர்க்கு இது நல்ல தியான மந்திரமாகிறது.

(ஆ) பிறப்பறுக்கும் வழிகள்

விழுமிய முதல்வன் சிவபிரான், பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த பித்தன். அவன் அருளால் காண்பதன்றி அளவையால் காண முடியாது. அவனை மனம் பின்பற்றுவதே பிறப்பறுக்கும் வாயிலென்பது கூறப்படுகின்றது.

"அருளினா லாகமத்தை அறியலாம்" எனத் தொடங்கி "பிறவி மாயா இருளெல்லாம் இருக்கலாகும் அடியாரோடிருக்கலாமே" என சிவஞானத்தாலன்றி அறிந்து கொள்ள முடியாத மண்ணுலகும் விண்ணுலகும் நிறைந்த சிறந்த ஒலிப்பொருளானை மனத்தால் நினைத்தலே பிறவிப் பயனறுக்கும் வழியாதலார் இங்கு சிவபுராணம் பிறவிப் பயனறுக்கும் தமிழ் மந்திரமாகிறது.

**தேனாகக் காணும் வாசகம்.**

சுவைப்பதற்கும் வாய்ப்பாக திருவாசகம் முழுவதிலுமே தேன் என்ற சொல் எடுத்தாளப்படுகிறது. இறைவனை மணிவாசகர் தேனாகக் கண்டார். சுவைத்தார், தித்தித்தார், இங்கும் "தேசனே தேனார் அமுதே சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று" எனப்பாடுகிறார். இது அனுபவத்தால் தேனூற்று இதை அனைவரும் பருகவே உலகுக்கு வழங்கியுள்ளார் என்பதில் வியப்பில்லை.

**சிவபுராணம் தமிழ் ஆகமம்**

ஆணவ வல்லிருளைப் போக்கும் சிவனுக்குரிய எட்டுக் குணங்களையும் விட்டு நீங்காது உறையப் புகன்று அருளப்பட்டது. இவை கைகூடுமாறு திருவருளை முன் நின்று, ஆகமமாகி அன்னிப்பவனை அண்மிக்கும் வழி என்பதாலும் அண்மைக் காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள் " ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க" எனும் ஆகமம் எனச் சிறப்பித்தனர். ஆகவே ஆகமத்தின் உட்பொருள் கொண்டதாகும் என்பதால் சிவபுராணம் ஆகமமாகிறது.

**சிவபுராணம் ஓர் முழுமையான பாமாலை**

ஆகமத்தின் உட்பொருள் கொண்ட இம் மாலையில் மலராக நின்று தொடக்கமும் முடிவும் இல்லாத முழுமை காணமுடியாத மாலையாகி மிகச் சிறந்த அனுபவத்துக்கு வழியாகிறது.

இனி ஒவ்வொன்றாக நோக்கினால், நமச்சிவாய எனத் தொடங்கி அவனருளாலே அவன் தாள் வணங்கி என்பது வரையான பதினெட்டு அடிகளின் கடவுள் வணக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகிறது. இறைவன் திருவருளை முன்னின்று "வாழ்க" என வரும் வாழ்த்து ஆறும் வெல்க என வரும் வெற்றி ஐந்தும் அடுத்து மாபெரும் அர்ச்சனைக்குரிய "போற்றி" என வரும் தொடர்எட்டும் ஓதிப் போற்றுகிறார்.

முந்தை வினை முழுவதும் ஓய உரைப்பன்யான் என்று செய்யப்படு பொருள் கூறப்படுகிறது. பரார்த்த வினையினால் சிவன் முத்தர் நிலையில் முன் செய்த வினைகள் ஒழியும்படி இறைவனை அத்துவித உண்மை காட்டிய பேரொளியாகக் காண்கிறார். பொல்லா வினையேல் என்னும் அடிகளால் அவையடக்கம் கூறப்படுகிறது.

சிந்தித்து அடைக்கலமடைந்து எல்லாப் பிறப்பும் பிறந்தும் இப்பிறப்பிலே உன் பொன்னடிகளை மெய்யாகக் கண்டேன். சிவபுராணம் உரைப்பேன் அதன் பொருள் உணர்பவர் சிவபுரம் சென்று அவனடிக்கீழ் பேரின்பம் அடைவர் என்பதே நீண்ட பொருளாகும்.

இறைவனை பராபர வஸ்துவாகக் கொண்டு தன் சிறுமை சொன்ன பின் குரு நிலையில் நிலத்தில் வந்து பாதம் காட்டி ஆண்ட கருணைக்கு உருகி இறைவனை ஒரு சுடராக மாசற்ற சோதியாக்கி காரிருளைப் போக்கி அறிவொளி தந்து உய்வாக்கும் பெருவெளியே எனப் போற்றுகிறார். முன்பு பொய்யை மெய்யாகப் பற்றியதாலே வந்த அல்லலை இப்போது மெய்யை மெய்யாகப் பற்றியதால் அறுத்து இளைப்பினை நீக்கி வீடுற்றேன் என்கிறார்.

இது வாழ்த்தியும் வெற்றி கூறியும் போற்றியும் சிவபுராணம் உரைப்பன் என நுதலிப் புகுந்தும் ஒன்றறியேன் என மயங்கியும் அவனின் அருளின் திறன், ஆற்றல், அருமை, பெருமை, எளிமை ஆகியவற்றை உரைத்து விளித்து, அலறி அடங்கி தமக்கும் பிறர்க்கும் உள்ளதாம் பயன் கூறி அருளப்பட்டுள்ளது.

"திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்பது போல இங்கு ஒவ்வொரு கருத்தும் நம் உள்ளத்தை தொட்டும் உணர்வுகளைக் கிளறி மெய் சிலிர்த்து விதிர் விதித்து விக்கித்து நிற்கச் செய்கின்றன. மனித வாழ்வில் நாம் உய்ய வேண்டுமெனில்" கற்றதனாலாய பயன் இறைவன் நற்றாழ் தொழுது தழுவல்" மெய்யுணர்வுடைய தமிழர் தெய்வம் ஒன்றை உண்மைப் பொருளாகக் கொண்டு இன்பப் பொருளைக் கண்டு சிந்தனை தனதாக்கி கண்ணினையும் இறைவன் திருப்பாதம் போதுக்காக்கி வந்தனையும் ஆக்கிய நிலையில் ஊனும் உணர்வும் உயிரும் உருகிக் களித்து குழைந்து ஒன்றிய அனுபவத்தில் திளைத்து நின்று பிறவிப் பயனறுக்கும் தேனாகக் காணும் தமிழ் மந்திரமாம் திருவாசகத்தை சிவபுராணத்தை ஓதுவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் வாழ்வில் என்னை நெகிழ வைத்த சம்பங்கள்

செல்வி மா.யுதீக்ஷினி
ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

எப்போது மனித குலத்தின் உயர்வுக்காக ஆன்மீகப் பேரொளி அவசியப்படுகின்றதோ அப்போது அவதாரங்கள் தோன்றுகின்றன. இத்தகைய அவதாரங்களிலே கலியுகத்தின் அண்மைக்கால ஓட்டத்தில் உயர்வில் உச்சம் பெற்ற அவதாரமாகத் திகழ்பவர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் "ராமனும் நானே! கிருஷ்ணனும் நானே!" எனத் தனது அவதார நோக்கத்தின்இறுதியிலே சுவாமி விவேகானந்தருக்கு உபதேசித்த பரமஹம்சர், இதற்கு முன்பாகவே ஒரு பக்தையிடம் "நானும் சாரதையும் ஒன்றே என அறிந்துகொள்" எனக் கூறியுள்ளார்.

இறைவனும், லோகமாதாவும் தனித்தனியே எடுத்த அவதாரங்கள் பலவுண்டு. இருவரும் ஒருவரே வந்த நிகழ்வு பரஹம்சர் – சாரதாதேவி அவதாரத்தில்தான் ஏற்பட்டது. குருதேவர் பூரணத்துறவையும், சர்வமத சமத்துவத்தையும் வாழ்ந்து காட்டினார். எளிமையையும் தெய்வீகமான பெண்மையின் உயர்வையும், தினசரி வாழ்க்கையையே தவமாகவும் வாழ்ந்து காட்டினார் அருள்மிகு அன்னை ஸ்ரீ சாரதாதேவியார். இந்திய பாரம்பரியத்தில் வந்த பெரும் பெண் அருளாளர்களுள் மிகச் சிறந்தவர் அன்னை ஸ்ரீ சாரதாதேவி.

மேற்கு வங்காளத்தில் ஜெயராம்பாடிக் கிராமத்தில் 1853, டிசம்பர் 22ந் திகதி ராமச்சந்திர முகர்ஜிக்கும் சியாமாசுந்தர்க்கும் மகளாக அவதரித்தார் எம் அன்னை. 5 வயது சாரதைக்கும் 23 வயதான ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கும் திருமணம் நடைபெற்றது. அவர்களிடையே குரு – சிஷ்யை உறவே நிலைப்பெற்றது. அன்றாட வேலைகளை ஆன்மீக சாதனையாகச் செய்யும் திறனை அடையப் பெற்றார் எமது அன்னை. சமாதியில் நிலைத்து அருட்பெரு வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கும் பரமஹம்சரை பல வருடங்களின் பின் தட்சிணேஸ்வரத்தில் சந்தித்தார். "என்னை இல்லறத்துக்கு இழுக்கவா வந்துள்ளாய்" என ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேட்க "இல்லை இல்லை உங்கள் தெய்வீக வாழ்க்கைக்கு உதவவே வந்தேன்" என கூறினார் அன்னை. இதனைத் தொடர்ந்து அவர் வாழ்க்கையின் 13 வருடங்கள் தவமாகவே இருந்தன. அவதாரப் பணியை நிறைவேற்றிய பரமஹம்சர் மகாசமாதியடைந்த பின்னர், அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருந்தாவனம், காசி போன்ற இடங்களுக்குச் சென்று தவமிருந்தனர். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சீடர்களுக்கெல்லாம் மடம் ஒன்றை அமைப்பதில் சுவாமி விவேகானந்தருக்கு ஊக்க மூட்டினார். பல மேலை நாட்டுச் சீடர்களையும் தமது ஆன்மீகக் குழந்தைகளாக ஏற்றுக் கொண்டார். பல காலம் பரவச நிலையிலேயே இருந்து அனைவரையும் ஆசீர்வதித்து ஆட்கொண்ட அருள்மிகு அன்னை 1920ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ந் திகதி தமது பூத உடலை உகுத்தார்.

இவர் வாழ்ந்த இந்தக் குறுகிய காலத்திலே, குறிப்பாக தட்சிணேஸ்வரத்தில் மீண்டும் வந்து ஸ்ரீ இராமகிருஷ்ணருடன் இணைந்த நாட்தொடக்கம் அன்னையின் அன்றாட நிகழ்ச்சிகளிலே மனதை நெகிழ வைக்கும் சம்பவங்கள் அனேகம் நிகழ்ந்துள்ளன.

இராமகிருஷ்ணருடனான சம்பவங்கள், எளிய மக்களுடனான தொடர்புகள் உண்டான சம்பவங்கள், தமது சீடர்களுடனான செயற்பாட்டால் உருவான சம்பவங்கள், இவரது உபதேசங்களின் போது ஏற்பட்ட சம்பவங்கள் என இவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். அனைத்து சம்பவங்களும் லோகமாதாவின் அன்புப் பெருவெள்ளத்தினுள் ஆன்மாக்களை இழுத்துச் செல்லும் வகையிலேயே அமைந்திருப்பது கண்கூடு

என்னை நெகிழ வைத்த முதலாவது சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். பேரானந்தப் பரவசநிலையிலே திளைத்திருக்கும் ஸ்ரீ இராமகிருஷ்ணரை எல்லோரும் பயித்தியரென்று பரிபசித்துக் கொண்டிருக்கும் செய்தி அன்னைக்கு எட்டியது. பல்லாண்டு காலமாக கணவரைப் பிரிந்திருக்கும் அன்னை பெருந்துயரத்துக்கு ஆளாகினார். கணவனைக் காண வேண்டும் என்ற பேரவாவில் ஜெயராம்பாடியிலிருந்து தட்சிணேசுவரத்துக்கு விரைந்து வந்தார். 18 வயதே அப்போது அடைந்திருந்த சாரதாதேவியார் ஒரு சாதாரண பெண்ணாக இருந்திருந்தால், ஸ்ரீராமகிருஷ்ணரைக் கண்டதும் துயரமேலீட்டால் அலறியடித்து ஓர் ஆர்ப்பாட்டமே நடந்திருக்கும். ஆனால் அப்படி எதுவும் அங்கே நிகழவில்லை. பரமஹம்சரது உருவைக் கண்டதும் அன்னைக்கு ஒரு பெரும் மனத்தெளிவு ஏற்பட்டது. புன்னகையுடன் அன்னையைப் பார்த்துப் பரமஹம்சர் "நீ என்ன இல்லற பந்தத்தினுள் இழுக்கப் போகிறாயா" எனக் கேட்டதிற்கு – "இல்லை, இல்லை நான் உங்களுக்கு ஆன்மீகத் தொண்டு புரியவே வந்துள்ளேன்" எனக் கூறி நின்றார். இல்லற வாழ்க்கையைப் பற்றிச் சற்றும் சிந்தியாது, தன் கணவனின் பெரும் ஆன்மீகப் பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட அன்னை சாரதாதேவியின் இந்தச் செயற்பாடு மனதை மிகவும் நெகிழ வைப்பதாகும்.

அன்னை தட்சிணேசுவரத்தில் வாழ்ந்த காலத்தில் குருதேவருக்குத் தானே உணவு சமைத்துக் கொண்டு சென்று பரிமாறுவார். ஒரு நாள் உணவை எடுத்துச் சென்ற போது ஒரு பெண் "அம்மா! இன்று உணவை நான் எடுத்துச் செல்கிறேன்" என்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையும் கொடுத்துவிட்டார். இப்பெண் உணவைக் குருதேவரின் அறையில் வைத்துவிட்டுச் சென்றாள். குருதேவர் சாப்பிட அமர்ந்ததும் அன்னையும் அருகில் அமர்ந்தார். குருதேவரால் அவ்வுணவைச் சாப்பிட முடியவில்லை. நெறிதவறிய பெண்ணொருத்தியே அவ்வுணவைக் கொண்டு வந்து வைத்துள்ளாள் என்பதை இராமகிருஷ்ணர் அறிந்து கொண்டார். எனவே அன்னையிடம் "அவளிடம் ஏன் உணவைக் கொடுத்தாய். அவள் தொட்ட உணவை நான் எப்படி உண்பது!" எனக் கேட்டார். அதற்கு அன்னை அமைதியாக "அவளைப்பற்றி எனக்குத் தெரியும். ஆனாலும் இன்று சாப்பிட்டு விடுங்கள்" எனக் கூறினார். பரமஹம்சர் "சாப்பிடுகின்றேன் ஆனால் இப்படி இனிமேல் யார்மூலமும் உணவு அனுப்புவதில்லை என வாக்குக் கொடு" என்றார். அன்னையோ அமைதியாக அவரை வணங்கி "இயன்றவரை நானே கொண்டு வர முயல்கின்றேன். ஆனால் என்னை யாராவது "அம்மா" என்று அழைத்து ஏதாவது கேட்டால் என்னால் மறுக்க முடியாது. அத்துடன் நீங்கள் எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் "குருதேவர் தான்" என்று கூறினார். இப்பதிலைக் கேட்டுப் பரமஹம்சரே மனம் நெகிழ்ந்து விட்டார்.

நெறிகெட்ட பெண்களை சமூகத்திலிருந்தே விரட்டியடிக்கும் அக்காலத்திலே "அம்மா" என்றழைத்த காரணத்தினால், இறைவனின் தாய்மையைப் பிரதிபலிக்கும் நோக்கோடு பரமஹம்சருக்கே உணவு எடுத்துச் செல்ல அனுமதித்த தெய்வீகத் தாயை நினைத்து மனம் நெகிழாதிருக்க முடியவில்லை. இது தாய்மையின் பேரன்பு. இதனால்தான் ரிஷிகள் "மாத்ரு தேவோ பவ" அதாவது தாயைக் கடவுளாகக் கருத வேண்டும் என்று போதித்தார்கள்.

அன்னை பிரம்மநிலையை உணர்ந்திருந்ததால் அவர் தம்மைத் தாயாகவும், தம்மிடம் வரும் அனைவரையும் குழந்தைகளாகவும் கருதினார். இதனால் பொங்கும் அவரது அன்பு தங்குதடையின்றி எங்கும் பாய்ந்தது – அனைவரையும் சென்றடைந்தது.

வறுமை காரணமாகத் திருடி அடிக்கடி சிறைசெல்லும் ஒரு முஸ்லிம் அம்ஜத். இவன் சாரதா அன்னை மீது அளவற்ற பக்தி கொண்டவன். அன்னையைத் தரிசிக்க வரும்போது அம்ஜத்துக்கு அன்னையே உணவு பரிமாறுவார். இதைப் பார்த்த அன்னையின் உறவினர் இப்படிச் செய்தால் உங்களை ஜாதியை விட்டு நீக்கிவிடுவார்கள் எனக் கூறினார். ஆனால் அன்னையோ "வாயை மூடுங்கள். எனக்கு ஜாதி, மதம் எதுவும் கிடையாது. சுவாமி சாரதானந்தர் எனக்கு எப்படி மகனோ அதேபோல்தான் அம்ஜத்தும் எனக்கு மகன்!! என்று தெளிவாகக் கூறினார். இதனை நினைத்து நெகிழாத மனமும் உண்டோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராது ஒருமுறை அன்னையை காலால் எட்டி உதைத்துப் பழியை அவர் மீதே போட்டாள். "கடவுளே! நீ எனக் காலைத் தொட்டுவிட்டாயே. என்கதி என்னாவது?!! எனக் கேட்டாள். அப்போது அங்கு வந்த பிரமச்சாரி ராஷ்பிஹாரி – "இந்த பைத்திய மாமி ராது 'அன்னையை' அவமதித்தாலும் கால் பட்டதற்குப் பயப்படத்தான் செய்கிறாள்" என்றார். தெய்வீக அன்னையோ மிகவும் சாந்தமாக – "மகனே! ராமன் சாட்சாத் நாராயணன் சீதைதான் 'மகா லக்ஸ்மி என்று இராவணனுக்குத் தெரியாதா என்ன? ஆனாலும் அவன் அவனது பாத்திரத்தை நடித்தான். அதுபோல் இவளுக்கும் என்னைத் தெரியும். ஆனால் அவள் இந்தப் பாத்திரத்தை நடிக்கவே பிறந்துள்ளாள்." எனக் கூறினார். அப்பெண்ணுக்காக அன்பு காட்டும் அன்னையின் கருணை அனைவரையும் நெகிழ வைப்பதன்றோ?

எனது மனதை நெகிழவைத்த சம்பவங்களுள் சிலவற்றை விளக்கினேன். அன்னையின் வாழ்வோ அருள்மயம். "மகனே! உனக்கு மன அமைதி வேண்டுமானால் யாரிடத்தும் குறைகாணாதே. உனக்கு அன்னியராக யாரும் இல்லை, உலகம் முழுவதையும் உனக்குச் சொந்தமாக்கிக் கொள்" என்ற அருள் அன்னையின் உபதேசத்தை முன்னிறுத்தி

பாவம் எனும் பெரு விருட்சத்தின் வேரதை
விழுத்த வல்லது அன்னை சாரதை சேவடிக்கமலம்

அதை ஆசித்து நிற்பாரின் அகமும் புறமும்
அழுக்கற்று ஆகும் அமலம் என்று கூறி முடிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்து விளக்கு ஏற்றுதலின் மகத்துவம்

செல்வி. வேதாஷினி நந்தகுமார்
ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

சைவ மக்கள் ஒளியை இறைவனாக வழிபடுபவர்கள். சிவனை "சொற்றுனை வேதியன் சோதி வானவன்" ஆகத் தரிசிப்பவர்கள். ஒளியானது இருளை அகற்றுகிறது. அத்துடன் எல்லாப் பொருள்களையும் வெளிப்படையாகக் காட்டுகிறது. சூரியன், சந்திரன், அக்கினி என்பன முச்சுடர்கள் அவை ஒளியைத் தந்து உயிர்களை வாழ்விப்பவை. எனவே அவற்றையும் கடவுளராக வழிபாடு செய்கின்றோம். நல்லன செய்யும் அனைத்தும் தெய்வாம்சம் பொருந்தியவை. ஆகவே அவை வணக்கத்திற்குரியவை. ஒளி, நன்மை பயப்பதால் வழிபாட்டிற்கும் வணக்கத்திற்கும் உரியது ஆகின்றது.

சைவர்கள், காலையிலும் மாலையிலும் வீட்டில் விளக்கேற்றி வழிபாடு செய்யும் வழக்கத்தை உடையவர்கள் மகாலட்சுமி எல்லா வித செல்வங்களையும் எமக்கு வழங்குபவள். "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" என்கிறது வள்ளுவர் மறை. இம்மை வாழ்வில் இன்பம் அடைவதற்குப் பொருட் செல்வம் தேவை என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். செல்வத்திற்கு அதிபதியாகிய மகாலட்சுமியை குத்து விளக்கில் தரிசிக்கின்றோம்.

குத்து விளக்கினை ஏற்றிய பின் அதனை ஊடுபற்ற விடுதல் கூடாது. ஊடுபற்றுதல் என்பது எண்ணெய் இல்லாமல் திரி காய்ந்து எரிதலும் புகைத்தலும் ஆகும். குத்து விளக்கு எரிந்து கொண்டிருக்கும் போது சிலர் வாயினால் ஊதி அணைப்பதைக் காண்கிறோம். அவ்வாறு செய்தல் தவறாகும். எந்தத் தீபத்தையும் வாயினால் ஊதி அணைத்தல் ஆகாது.

வைபவங்களைத் தொடங்கும் போது குத்துவிளக்கு ஏற்றி வைக்கும் வழக்கம் சைவமக்கள் இடையே காணப்படுகின்றது. இது தொன்று தொட்டு இருந்து வரும் மரபு ஆகும். சமய விழாக்கள், கிரியைகள், சடங்குகள் என்பவற்றை ஆரம்பிக்கும் போதும் சரி, குத்துவிளக்கு முதலில் ஏற்றப்படுகிறது. அதற்குப் பூசை, வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. சூரிய ஒளி கிடைக்கும் பகல் நேரத்திலுங்கூட குத்து விளக்கு ஏற்றப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து விளக்கு எரியும் போது சுடர்பட்டு மலர்கள் எரிந்து கருகுவதையும் காண்கின்றோம். அந்த நிலை ஏற்பட விடக்கூடாது. ஆகையால் மலர் மாலைகள் விளக்குச் சுடர் படாதவாறு சூட்டப்படுதல் வேண்டும். குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொள்ளக் கூடாதல்லவா?

நற்காரியங்கள் செய்யத் தொடங்கும் போதும், திறப்பு விழாக்கள், கலைவிழாக்கள், மங்கல நிகழ்வுகளை நடாத்த ஆரம்பிக்கும் போதும் குத்து விளக்கு ஏற்றப்படுவது ஏன்? என்று பலர் வினா எழுப்புகின்றார்கள். மரபு, சம்பிரதாயம், பாரம்பரியம் யாவும் காரணத்துடன் தான் தோன்றியிருக்க வேண்டும்.

ஒளி அறிவை உணர்த்தும் சின்னம், இறைவன் பேரறிவாளன். அறிவின் ஊற்று இறைவனே. எல்லாவித அறிவிற்கும் மூலதத்துவமாக விளங்கும் இறைவனை முன் வைத்து ஆற்றுங் கருமங்கள் நீதியாக அமையும், அதனால் வெற்றி பெறுகின்றன.

ஒளி இருளை அகற்றும்: அறிவொளி அறியாமையை நீக்கும் அறியாமை அகன்று விட்டால் நாம் எடுத்த கருமங்களுக்குக் குறுக்கே அறியாமையால் ஏற்படுகின்ற இடர்பாடுகள், இடையூறுகள் அகற்றப்பட்டு விடும். அறிவொளியின் துணையால் எல்லாக் காரியங்களும் இனிது நிறைவேறும். இதனை உணர்த்தவே குத்து விளக்கு ஏற்றப்படுகிறது. இறைவனை விசாரித்துக் காரியத்தைத் தொடங்கு, உணர்ச்சி வயப்படாமல், அறிவு வயப்பட்டு அறிவின் வழிகாட்டலில் கருமங்களைச் செய் என்னுங் கருத்துக்கள் தொனிக்கின்றன. விளக்குத்திரி தன்னை எரித்து உலகிற்கு ஒளியூட்டுகிறது. தியாகமும் தன்னலமின்மையும் இங்கு உணர்த்தப்படுகிறது.

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்கையும் "பணிபுரி பலனை எதிர்பாராதே" என்ற பகவத் கீதை மகுட வாசகத்தையும் குத்து விளக்கேற்றுதல் கருமத்தின் ஆரம்பத்திலேயே நமக்கு உணர்த்துவதாக அமைகின்றது.

விளக்குச் சுடர் எப்போதும் மேல் நோக்கியதாகவே உள்ளது. அது போன்று எமது எண்ணங்கள் பேச்சுக்கள் செயல்கள் யாவும் மேல் நோக்கியனவாயும், உயர்ந்தனவாயும் இருத்தல் வேண்டும். ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் ஏற்றப்படலாம். குத்து விளக்கு ஏற்றல் ஆனது நமக்குப் பல ஆன்மிக உலகியல் உண்மைகளை உணர்த்துகிறது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள் கல்வியை

துஷியந்தினி திருப்பூலியூர்சிங்கம்

காலம் காலமாய் காத்திருந்து கற்ற கல்வி
காரணம் இன்றி கற்ற கல்வி
கணப் பொழுதில் மறந்திட்ட கல்வி
கள்வனைப் போல் மறைந்திட்ட கல்வி
காரணம் எதுவோ காலம்தான் பதில் தர வேண்டும்
அன்புடன் கற்ற கல்வி
ஆசான் அன்னையாய் மாறிய கல்வி
இலகுமுறையில் ஈட்டிய கல்வி
ஈட்டியாய் இதயத்தில்
உருமாறும் உலகை வென்ற கல்வி
ஊருக்காய் உழைத்த கல்வி
என்னிடம் வளர்ந்த கல்வி
ஏழைக்கு உதவும் கல்வி
ஐயம் இன்றி கற்ற கல்வி
ஒருமைப்பாட்டை ஏற்ற கல்வி
ஓங்கும் சிறப்பை தரும் கல்வி
ஒரு நாளும் அழியாத கல்வி
கற்கின்ற காலம் சிறிதல்ல
நினைக்கின்றதெல்லாம் நினைவல்ல
செய்கின்ற செயல் எல்லாம் செயலும் அல்ல
இறை அன்பு கூடிய கல்வியே உண்மைக்கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2004 இல் நவராத்திரி விழாவை முன்னிட்டு இந்து மன்றத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்

1. தேவாரம் மனனம்

| | | |
|---|---|---|
| தரம் 1A | i. | சிவாத்மணி உதயசங்கர் |
| | ii. | லக்சுமி மகேந்திரராஜா |
| | iii. | சுதர்ஷிகா மனோகாந்தன் |
| தரம் 1B | i. | ஸ்ருதி சுதன் |
| | ii. | லாவண்யா பாஸ்கரன் |
| | iii. | தர்ஷிகா இளங்கோவன் |
| தரம் 1C | i. | மாதங்கி நவக்குமார் |
| | ii. | பைரவி ஜெயபாலன் |
| | iii. | விஸ்ணுகா சித்திரவேல் |

2. வினாவிடைப் போட்டி

| | | |
|---|---|---|
| தரம் 2A | i. | ஹரித்ரா நவரெட்ணம் |
| | ii. | மதுரண்யா முரளிதரன் |
| | iii. | லீசா பாலச்சந்திரன் |
| தரம் 2B | i. | வினுஷ்டிகா பரமேஸ்வரன் |
| | ii. | ஸ்ரீகரி கேதீஸ்வரன் |
| | iii. | லதாருபினி அசிலேசவர் சர்மா |
| தரம் 2C | i. | ஜ. ஆதித்தியா |
| | ii. | ஜெ. ஹிருசாயினி |
| | iii. | சி. சங்கவி |

3.

| | | |
|---|---|---|
| தரம் 3A | i. | வித்தியா சிவசங்கரநாதன் |
| | ii. | தயானந்தி மகேஸ்வரன் |
| | iii. | துளசினி இராமகிருஷ்ணன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 3B
- i. தாட்சாயினி சூரியவிந்தன்
- ii. தீபா அலாவுதீன்
- iii. 1) அபிவர்சனா மனோகரன்
  2) வித்தியாசங்கரி ஜெகன் மோகன்

தரம் 3C
- i. 1) யனனி ஸ்ரீதரன்
  2) ரூபிஹா கந்தசாமி
- ii. 1) மதுஷாளினி வரதராசா
  2) சங்கவி மத்தியூஸ்
- iii. 1) மிதுலா சுபாஸ்கரன்
  2) கெதாஜினி தேவானந்தன்

4. வினாவிடைப் போட்டி

தரம் 4A
- i. சர்மியா விபுணசேகரன்
- ii. கலக்ஷிகா சிவராஜா
- iii. யுவாகினி விஜயலிங்கம்

5. திருக்குறள் மனனம்
- i. கலக்ஷிகா சிவராஜா
- ii. கஜனியா புஷ்பராஜா
- iii. சர்மியா விபுணசேகரன்

6. வினாவிடை

தரம் 4B
- i. டிருஷா புலேந்திரராஜ்
- ii. கிருத்திகா நாதன்
- iii. 1) பிரியங்கா பாக்கியராசா
  2) கவிஷாலினி சிவபாதசுந்தரம்

7. திருக்குறள் மனனம்
- i. சிரோமிகா ஆனந்தஜோதி
- ii. கிருத்திகா நாதன்
- iii. கவிஷாலினி சிவபாதசுந்தரம்

8. வினாவிடை

தரம் 4C
- i. வி. கிருத்திகா
- ii. சி. தேனுஜா
- iii. ஸ்ரீ. லக்ஷிகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. திருக்குறள் மனனம்

i. சு.சங்கீர்த்தனா

ii. சி.தேனுஜா

iii. மா.இந்துஜா

10. வினாவிடைப்போட்டி

தரம் 5A

i. நிதர்ணா சிவலிங்கம்

ii. லோஜிகா கனகசூரியன்

iii. காயத்திரி மனோகரன்

11. திருக்குறள் மனனம்

i. நிதர்ணா சிவலிங்கம்

ii. சங்கீரணி கிருபாகரன்

iii. சகாளினிசமிக்கா உருத்திரகுமார்

12. தரம் 5B வினாவிடை

i. பிரணவி ஞானசக்தி

ii. கேசிகா கோணநாயகம்

iii. கிஷானா டொமினிக்

13. திருக்குறள் மனனம்

i. பிரணவி ஞானசக்தி

ii. அனுஷிகா பொன்னையா

iii. 1) லக்ஷிகா ஸ்ரீரட்ணம்
2) ஜசிந்தா சிவநேசன்

14. தரம் 5C வினாவிடைப்போட்டி

i. ஜதுர்ஷியா பரமசிவம்

ii. நிருஜா மனோகரன்

iii. சஜித்திரா இராஜசேகர்

15. திருக்குறள் மனனம்

i. தர்ஷிகா ஜெகநாதன்

ii. ஜதுர்ஷியா பரமசிவம்

iii. 1) சஞ்சுதா சிவதாஸ்
2) பருஜா நாகூர் அடிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வினாவிடைப்போட்டி

i. மோனாலிசா சிவகுருநாதன் - 6C

ii. கிஷாந்தினி உதயசூரியன் - 6B

iii. சுபத்திரா ஜோதிராசா – 6C

17. வினாவிடைப்போட்டி

i. வேதிகா சங்கரலிங்கம் - 7B

ii. கீர்த்தனா காந்திநாதன் - 7A

iii. ஆர்த்திகா விஜயலிங்கம் - 7C

18. வினாவிடைப்போட்டி

i. டிரஞ்சலாதேவி பத்மநாதன் - 8B

ii. டிக்சலாதேவி பத்மநாதன் - 8B

iii. கிஷாந்தினி நடராஜபிள்ளை – 8A

19. வினாவிடைப்போட்டி

i. பிருந்தா ஸ்ரீதரன் - 9B

ii. ஜயந்தி .ப – 9C

iii. ஸ்ரீவர்த்தனி சிவபாலன் - 9A

20. வினாவிடைப்போட்டி

i. நிரோஜினி திருப்புலியூர் சிங்கம் - 10C

ii. தர்ஸிகா தேவதாஸ் - 10B

iii. டொறின் போஷியா தர்மகுலசிங்கம் - 10C

21. வினாவிடைப்போட்டி

i. ஜெயகௌரி கதிரேசன்

ii. 1) சஜித்தா இலங்கேஸ்வரன்

2) சிந்துஜா இரட்னசபாபதிப்பிள்ளை

iii துஷியந்தினி திருப்புலியூர்சிங்கம்

22. தரம் 6, 7, 8 இல் தெரிவு செய்யப்பட்ட பேச்சுப் போட்டி முடிவுகள்

i. தனுஷியா சிவகுமார் – 8A

ii. திவ்யா மோகன் - 7B

iii. பிரித்திகா பேரானந்தம் - 8A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. தரம் 9, 10, 11 இல் தெரிவு செய்யப்பட்ட பேச்சுப் போட்டி முடிவுகள்

i. சரண்யா மைக்கல் - 9C

ii. சிவதாரணி சர்வானந்தம் - 10C

iii. பிருந்தா ஸ்ரீதரன் - 9B

24. உயர்தர பேச்சுப்போட்டி முடிவுகள்

i. கிருத்திகா கிருபைராஜா – 13Com A

ii. தாட்சாயினி வில்வராஜா – 13Bio

iii. தர்ஷினி சிவகணேஷ் - 13Com

**இந்து சமயப் போட்டியில் வலயம், மாவட்டம், தேசிய மட்டத்தில் பங்குபற்றிய மாணவியர் விபரம்.**

தேசிய மட்டம் - I விவேகானந்த பரீட்சையில் தங்கப் பதக்கம் பெற்றவர் விபரம்

1ம் இடம் - ஆண்டு – 1999 – தரம் 3 - ஜெப்பிரனியா ஆறுமுகம்

2ம் இடம் - ஆண்டு – 2003 – தரம் 7 - டிக்சலாதேவி பத்மநாதன்

3ம் இடம் - ஆண்டு – 2003 – தரம் 10 - மைத்ரேயி மகேஸ்வரன்

2004 சாரதாதேவி 150வது ஜயந்தி விழாவினையொட்டிய பேச்சுப் போட்டியில்,

தேசிய மட்டம் 1ம் இடம் மேற்பிரிவு – யுதீக்ஷினி மாணிக்கவாசகம்

3ம் இடம் மத்திய பிரிவு - ஷர்மியா பேரானந்தம்

தேசிய மட்டம் - பண்ணிசை போட்டி

2004 – கீழ்ப்பிரிவு – பிரணவி ஞானசக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நன்றிக்குரியவர்கள்

- ❖ மலருக்கு ஆசியுரை வழங்கி மலரைச் சிறப்பித்தும், திருமலை மண்ணினை வளம்படுத்தி பக்தி வளம் பெருக்கும் வணக்கத்திற்குரிய வேதாகமாமணி சோ.ரவிச்சந்திரக்குருக்கள்.

- ❖ செந்தமிழ் தினமும் செழிந்து ஓங்கி விடவும் எம் இந்துப் பண்பாடு சிறப்படையவும் தன்பணி செய்யும் அதே வேளை எமது மலருக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த ஞான சிரோன்மணி சைவப்புலவர், பண்டிதர்.ஆர்.வடிவேல் ஐயா அவர்களுக்கும்,

- ❖ எமது கல்விக்கூட்டத்தில் இடம்பெறும் அனைத்துச் செயற்பாடுகளிலும் கலந்து சிறப்பிப்பதோடு பங்காளராக பங்குபற்றி எமக்கு ஆசிச்செய்தியை நல்கிய ஆசிரிய ஆலோசகர் திருமதி.அ.வேலாயுதம் அவர்களுக்கும்,

- ❖ இந்து மன்றத்தை இயங்க வைத்து செயல் ஊக்கம் அளித்து வரும் இடர்களை இலகுவாக்கி எம்மை செம்மைப்படுத்தியதோடு ஆசிச் செய்தியை வழங்கி சிறப்பித்த எமது கல்லூரி அதிபர் திருமதி.சந்திரா பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும்,

- ❖ ஆன்மீக விருத்தியில் தம்மை ஆளுமையுடையவராக்கி எமது மலர் வெளியீட்டில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் திரு.வே.பொ.பாலசிங்கம் செயலாளர் புனர்வாழ்வு அமைச்சு (வகிமா) ஐயா அவர்களுக்கும்,

- ❖ இம்மலர் வெளியீட்டு செலவில் பங்கெடுத்த நல்உள்ளங்களுக்கும்,

- ❖ இம்மலர் வெளியீட்டிற்குரிய கட்டுரைகளை வழங்கிய பேராசிரியர், ஆசிரிய ஆலோசகர், ஆசிரியர், மாணவர்கள் அனைவருக்கும்,

- ❖ மலரில் இடம்பெற்ற கட்டுரைகளை ஒப்புநோக்கித் தந்த எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி.யோ.சுந்தரலிங்கம், திருமதி.திருமால் ஆகியோர்களுக்கும்,

- ❖ குறுகிய காலத்தில் சிறந்த முறையில் இம்மலர் சிறப்புற அச்சிட்டு வழங்கிய ரெயின்போ நிறுவனத்தினருக்கும்,

- ❖ போட்டிகளை பாடசாலையிலும், பாடசாலைகளுக்கு இடையிலும் நடாத்துவதற்கு உதவிய சகல நடுவர்களுக்கும்,

- ❖ கணினியச்சுப் பதிவினை அழகாவும் நேர்த்தியாகவும் மேற்கொள்வதில் உதவியளித்த பழைய மாணவிகளான செல்வி.ஜெ.யமதி ஜெகநாதன், செல்வி. ராஜினி சண்முகதாஸன் அவர்களுக்கும்,

- ❖ பரிசில்களுக்கான புத்தகங்களை அன்பளிப்புச்செய்த செல்வி மணிமேகலை கார்த்திகேசு அவர்களுக்கும்

- ❖ இந்நூல் வெளியீட்டிலும், விழாவிலும் பங்கெடுத்த அனைவருக்கும்

## எமது நன்றிகள்.

"காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தினால் மாணப் பெரிது"

**இந்து மன்றம்.**
**திருக்கோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி**
**(தேசியபாடசாலை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org